# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2018

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**

பீ பிரிவு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை.

# உள்ளடக்கம

1. அறிமுகம்........................................................................................................................68

1.1 திணைக்களத்தின் வரலாறு.......................................................................................69

1.2 மாகாண சபைகள் தாபிக்கப்பட்டமையும், திணைக்களத்தின் அதிகாரங்களும்......................70

1.3 எமது நோக்கு.....................................................................................................71

1.5 எமது பெறுமானங்கள்............................................................................................71

1.4 எமது செயற்பணி..................................................................................................71

1.6 எமது அர்ப்பணிப்பு................................................................................................72

1.7 நிகழ்ச்சித்திட்டங்கள்.............................................................................................73

1.8 திணைக்கள ஒழுங்கமைப்பும், பதவியணியினரை ஈடுபடுத்தலும்..............................................73

**2.** தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு...................................................................................76

2.1 தாபன மற்றும் நிர்வாகப் பிரிவின் பிரதான செயற்பணி...................................................77

2.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், ஆராய்ச்சியும்...................................................................79

2.2.1 வெளிக்கள அலுவலா்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்...................................79

2.2.2 சிறுவர் இல்ல கீழ்நிலை பதவியணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்......................................81

2.2.3 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கான வளப்பகிர்வாளர் ஒதுக்கம்................81

**2.2.4** சிறுவர்கள் தொடர்பாகப் பணியாற்றுகின்ற ஒருங்கிணைந்த அலுவலர் பயிற்சி...................82

**3.** கணக்குப் பிரிவு.......................................................................................................84

3.1 நிதிசாா் முன்னேற்றம்.................................................................................................85

3.1 ***கணக்காய்வு அவதானிப்பு***.........................................................................................859

**4.** நன்னடத்தைப் பிரிவு ..........................................................................................…88

4.1 அறிமுகம்..............................................................................................................89

4.2 பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்..........................90

4.3 சிறுவா் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தல்..........................................................91

4.4 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவா்களின் திறமைகளை வளா்த்தல்................................93

4.5 சிறுவா் இல்லங்களைக் கண்காணிப்புச் செய்தல்..........................................................95

4.6 ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பாக போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அலுவலர்களை விழிப்பூட்டல்..............................................................................................97

4.7 நீதிமன்றங்களிலிருந்து சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கு சிறுவர்களை ஏற்றிச் செல்லுதல் 97

4.8 மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்ற நன்னடத்தை அலுவலர்களைப் பயிற்றுவித்தல ........ 98

4.9 தத்தெடுத்தல் ........ 99

5. அபிவிருத்திப் பிரிவு ........ 100

5.1 அறிமுகம் ........ 101

5.2 சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதற்காக கல்வி உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல ........ 102

5.3 செப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டம் ........ 104

5.4 நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் திட்டம் ........ 105

5.5 இரட்டைக் குழந்தைகளுக்கான உதவி ........ 106

5.6 மருத்துவ உதவி ........ 107

5.7 திடீர் அனர்த்த உதவி ........ 109

5.8 செனஹச சேமிப்புக் கணக்கு ........ 110

5.9 செவண சரண கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டம் ........ 111

5.10 சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபிக்கும் கருத்திட்டம் ........ 112

5.11 தெருக் குழந்தைகளுக்கான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டம் ........ 118

5.12 சிறுவர் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் ........ 118

5.13 சிறுவர் உரிமைகள் சாசனத்தினை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம் ........ 119

5.14 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 121

5.15 உலக சிறுவர் தினம் ........ 121

5.16 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள் ........ 122

5.17 பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல் ........ 122

5.18 சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகள் (Child Led Research) ........ 124

5.19 சிறுவர்களை மையமாகக் கொண்ட அனர்த்த ஆபத்துக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டம ........ 125

5.20 குழந்தைகள் மீதான வன்முறையைக் குறைப்பதற்கான தெற்காசிய வலய அமைப்பு ........ 125

5.21 மாதாந்த மற்றும் வருடாந்த முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கான இணையவழி தரவு முறைமை ........ 126

5.22 இலங்கைச் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அனைத்து வகையிலுமான துன்புறுத்தல்களைத் தடுப்பது தொடர்பான தேசிய சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல்கள் ........ 126

5.23 மூன்று வருட பிரதேச திட்டம் ........ 127

5.24 நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்தின் மூலம் இயக்கப்படுகின்ற மாடி வீடுகளில் குடியுள்ள சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ........ 129



# 01

# அறிமுகம்

## 1.1 திணைக்களத்தின் வரலாறு

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளில் இலங்கையில் நீதிமன்றத்தினால் நன்னடத்தை முறை பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட்டது. 1907 இல் இங்கிலாந்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தவறாளிகள் தொடர்பான நன்னடத்தை கட்டளைச் சட்டம் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் தொடர்பிலும் தாக்கம் செலுத்தியது. 1944 இல் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 22 ஆம் இலக்க நன்னடத்தை கட்டளைச் சட்டமானது மேலே குறிப்பிடப்பட்ட தாக்கங்களின் பெறுபேறாகும். இந்தக் கட்டளைச் சட்டத்தின் மூலம் நன்னடத்தை முறை இலங்கை நீதிமன்றங்களிலும் அமுலுக்கு வந்தது. இங்கிலாந்தின் நன்னடத்தைச் சேவைகள் ஊடாக இலங்கையிலும் நன்னடத்தைச் சேவைகளை ஆரம்பிக்கும் செயற்பணி, இங்கிலாந்தின் மதியுரையாளரொருவரான திரு எச்.ஏ. லீடீனிடம் பொறுப்பளிக்கப்பட்டதுடன், அதற்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட நன்னடத்தைச் சேவைகள், நன்னடத்தை அலுவலர்கள் சிலர் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. பரீட்சார்த்தமாக நாட்டிலுள்ள ஒரு சில நீதிமன்ற பிரிவுகளில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் இந்த சேவை நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து இச்சேவையை மேம்படுத்த வேண்டிய தேவையும் எழுந்தது.

1949 இல் நீதிபதி திரு. கிறேசியனின் தலைமையில் நியமனம் செய்யப்பட்ட குழுவின் சிபாரிசுள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் சகல நீதிமன்ற வலயங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நன்னடத்தைச் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இந்த சேவையின் நிர்வாக நடவடிக்கைகள் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

குழந்தை, இளைஞர் கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சிறுவர்களுக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை ஒன்றுதிரட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பாக திரு. சிறில் ஹெம்லீனின் அறிக்கையினூடாக சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி சிபாரிசுக்கு அமைய 1956 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் முதலில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அடிக்கடி பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இதனைக் கொண்டு வந்தன. 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இது மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவைகள் அமைச்சின் கீழும், 2001 ஆம் ஆண்டில் சமூக சேவைகள், மீனவர் சமுதாய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2002 இல் சுகாதார போசாக்கு, நலன்புரி அமைச்சின் கீழும், 2003 இல் சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2004 ஆம் ஆண்டில் மகளிர் அபிவிருத்தி, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2005 ஆம் ஆண்டு முதல் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரைகாலம் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் கீழும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சின் கீழும் இந்தத் திணைக்களத்தின் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

## 1.2 மாகாண சபைகள் தாபிக்கப்பட்டமையும், திணைக்களத்தின் அதிகாரங்களும்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தடுப்பு இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், நன்னடத்தை அலுவலகங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் உதவி ஆணையாளர்கள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டார்கள்.

1987 இல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அமுலுக்கு வந்ததையடுத்து, மேற்படி ஒழுங்கமைப்பு மாற்றமடைந்ததுடன், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவையானது, மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதுவரை ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உதவி ஆணையாளர் பதவிகளும் ரத்துச் செய்யப்பட்டன. மாகாண சபைகளின் கீழ் மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்கள் சகல மாகாணங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டார்கள் என்பதுடன், நன்னடத்தை அலுவலகங்கள் அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

1991 ஆம் ஆண்டு இலங்கை சிறுவர் உரிமைகள் பற்றிய பூகோளப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டதுடன், 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. மேற்படி சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் காணப்படுகின்ற யாப்புக்களை அமுல்படுத்த வேண்டியதன் தேவைக்காக 1999 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் தமது வெளிக்கள கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதை நோக்காகக் கொண்டு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் எனும் புதிய பதவி உருவாக்கப்பட்டு அதற்கு அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். தற்போது இவர்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றனர். இதனூடாக நன்னடத்தை விடயம் மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

## 1.3 எமது நோக்கு

சிறுவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டதும், அவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமானதுமான சமூகம்

## 1.4 எமது செயற்பணி

தேசிய கொள்கைகள், சர்வதேச நியமங்களுக்கு அமைய அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களையும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு சகல சிறுவர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

## 1.5 எமது பெறுமானங்கள்

- ❖ சிறுவர்களை அடிப்படையாகக் கொள்ளல்
- ❖ பாசம்/கருணையை அடிப்படையாகக் கொள்ளல்
- ❖ ஒத்துழைப்பு அணுகுமுறை
- ❖ சிறந்த அர்ப்பணிப்பு
- ❖ நல்லிணக்கம்

## 1.6 எமது அர்ப்பணிப்பு

- சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- அநாதைகளான, கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், உறுதி செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சம்பந்தப்பட்ட அமைச்சுக்களையும், மாகாண சபைகளையும் ஒருங்கிணைப்புச் செய்து அவர்களது சிபாரிசுகளின் அடிப்படையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சட்டங்களை தேசிய மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு திருத்தியமைத்தல்.
- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப அறிவையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்தல்.
- சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- மக்களின் தேவைகளுக்கு திருப்திகரமானவாறு வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றல
- வினைத்திறனுடன் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியவாறான பதவியணியொன்றைப் பயிற்றுவித்தல்.

## 1.7 நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு
- வெளிநாட்டு தத்தெடுத்தல்கள்
- சிறுவர்களின் கல்வி உரிமைகளை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள
    - ✓ செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின மூலம் அநாதரவான சிறுவர்களுக்குத் தேவையான நிவாரணங்களைச் செய்து கொடுத்தல்
    - ✓ நெனதிறிய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிவாரணங்களை அமுல்படுத்தல்
    - ✓ கெப்பக்கரு தெகுரு பெற்றோர் பாதுகாவளர் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதற்கான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல்.

- சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்கான சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல
- பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்
- ஆலோசனை அவசியமான, சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்காக பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவை தேசிய நிலையத்தை பேணிவருதல்

## 1.8 திணைக்கள ஒழுங்கமைப்பும், பதவியணியினரை ஈடுபடுத்தலும்

இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான பிரதி / உதவி ஆணையாளர்கள் இருவர், திணைக்களம்சார் உதவி ஆணையாளர், கணக்காளர், சட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், நன்னடத்தை அலுவலர்கள் இருவர் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் இருநூற்று முப்பத்து இரண்டு பேரை உள்ளடக்கிய பதவிநிலை அலுவலர்களின் உதவியுடன் ஆணையாளர் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயற்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளார். திணைக்கள ஒழுங்கமைப்புக்கு உட்படும் பிரிவுகளாவன:

1. தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு
2. கணக்குகள் பிரிவு
3. நன்னடத்தைப் பிரிவு
4. அபிவிருத்திப் பிரிவு
5. பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்.

திணைக்களத்தின் சகல பதவியணியினரும் உச்சளவான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஒட்டுமொத்த பதவியணி 490 பேரைக் கொண்டுள்ளதுடன், தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 447 பேரைக் கொண்டதாக அமைந்துள்ளது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| ஆணையாளர் (இ.நி.சே. I) | 01 | 01 |
| பிரதி /உதவி ஆணையாளர் (இ.நி.சே. II/III) | 02 | 01 |
| உதவி ஆணையாளர் (திணைக்களம்சார்) | 01 | 01 |
| கணக்காளர் | 01 | 01 |
| சட்ட அலுவலர் | 01 | 00 |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 |
| சிரேஸ்ட நன்னடத்தை அலுவலர் | 01 | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 |
| நன்னடத்தை அலுவலர் | 02 | 00 |
| புள்ளிவிபர அலுவலர் | 01 | 01 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் (CRPO) | 424 | 229 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் (CRPA) | | 168 |
| அபிவிருத்தி அலுவலர் (தலைமை அலுவலகம் /பரத்த) | 12 | 10 |
| உளவியல் ஆலோசகர் | 02 | 00 |
| தகவல் தொழில்நுட்பவியல் அலுவலர் | 01 | 00 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 14 | 15 |
| சுருக்கெழுத்தாளர் | 01 | 00 |
| முறைசாரா கல்வி ஆலோசகர் | 03 | 03 |
| உதவி வோர்டன் | 01 | 01 |
| சாரதி | 04 | 04 |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 10 | 07 |
| சமையற்காரர் | 02 | 02 |
| துப்பரவேட்பாட்டு தொழிலாளி | 01 | - |
| **மொத்தம்** | 490 | 447 |



02

# தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு

## 2.1 தாபன மற்றும் நிர்வாகப் பிரிவின் பிரதான செயற்பணி

- திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள்.
- நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தொடர்பான புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- திணைக்கள பதவியணியினரின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் தேர்ச்சி மட்டங்களை பரீட்சிப்பதற்கான பரீட்சைகளை நடாத்தல்.
- சகல பதவியணியினருக்கும் முறையான பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது உள்ளக பதவியணியினரின் அறிவை மென்மேலும் வளர்ப்பதற்கும், புதிய அபிவிருத்தி உபாயமுறைகளை அறிமுகம் செய்வதற்கும், புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மற்றும் பதவியணியினருக்குத் தேவையான பயிற்சிகளையும், அறிவையும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய,

தாபன நடவடிக்கைகள், நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகள் மற்றும் ஊழயர் தூண்டல் பயிற்சி நடவடிக்கைகள் என்பவற்றுக்காக ரூபா 250,000/- ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | அலுவலர்களின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| அலுவலக முகாமைத்துவ மற்றும் அலுவலக முறையியல்கள் | 2 | 17,000.00 |
| கணக்கீட்டுச் செயற்பொறுப்பு மற்றும் நடைமுறை ரீதியான பயன்பாடு | 1 | 6,000.00 |
| ஊழியர்களுக்கான தூண்டல் நிகழ்ச்சித்திட்டம் | 68 | 154,800.00 |
| ஆங்கில மொழிக் கல்வி பயிற்சிப் பாடநெறி | 1 | 35,000.00 |
| தகவல் தொழில்நுட்பம் டிப்ளோமா பாடநெறி | 1 | 35,000.00 |
| **மொத்தம்** | **82** | **247,800.00** |

திணைக்களம்சார் அலுவலர்களின் விடய அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கான பட்டப்பின் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிக் கட்டணங்களில் 50% - 75% தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக 436,970/- ரூபா ஒதுக்கப்பட்டது.

| பட்டம்/பயிற்சிப் பாடநெறியின் பெயர் | அலுவலர்களின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|
| ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறி | 1 | 17,500.00 |
| தமிழ் மொழி ஆவணங்கள் - II ஆம் கட்டம் | 1 | 11,550.00 |
| சமூகவியல் பற்றிய முதுமாணி பட்டப் பாநெறி | 2 | 119,420.00 |
| குடும்ப ஆலோசனை பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி | 2 | 42,000.00 |
| பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின் படிப்பு பாடநெறி | 1 | 147,500.00 |
| இசை சிகிச்சை பற்றிய செயலமர்வு | 1 | 4,500.00 |
| தத்துவஞானி பட்டம் | 1 | 24,500.00 |
| ஆலோசனை பற்றிய டிப்ளோமா பாடநெறி | 2 | 70,000.00 |
| **மொத்தம்** | **11** | **436,970.00** |

## 2.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், ஆராய்ச்சியும்

### 2.2.1 வெளிக்கள அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் துஷ்பிரியோகங்களைக் குறைத்து சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்காக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களமானது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இலங்கைக்கான சிறுவர் சந்ததியினரின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைபடுத்தும்போது அதற்காக போதிய அறிவினைக்கொண்ட அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்துவது இன்றியமையாத ஒரு விடயமாகும். அதன் பிரகாரம் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களும் உதவி அலுவலர்களும் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அலுவலர்கள் சிறுவர்கள் தொடர்பாக களத்தில் பணியாற்றும்போது அவர்கள் கொண்டுள்ள அறிவு போதுமானதாக அமையாதமையினாலும் அவர்களின் அறிவு நிதமும் இற்றைப்படுத்தப்பட வேண்டுமென்பதாலும் அவ்வலுவலர்களின் அறிவு, திறன்கள், மனோபாவங்கள் என்பவற்றை ஆக்கவிளைவுடன் நெறிப்படுத்த வேண்டுமென்பதாலும் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். அதற்காக தேசிய நன்னடத்தை,சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினால் 2018 ஆம் ஆண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| செலவுத் தலைப்பு | - | 217-2-2-2401 |
| அங்கீகரிக்கபட்ட ஒதுக்கீடுகள் | - | ரூபா.1,000,000.00 |

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பங்குபற்றியோர்களின்எண்ணிக்கை | நடத்தப்பட்ட திகதி | செலவு ரூபா. | விடயத் தலைப்புகள் |
|---|---|---|---|---|
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 26<br>28<br>27<br>26<br>28 | 2018.04.24 – 26<br>2018.05.14 -16<br>2018.07.09 – 13<br>2018.07.10 – 16<br>2018.08.13 - 16 | 95,320.00<br>106,605.00<br>180,.040.00<br>160,210.00<br>104,757.00 | • திணைக்களம்சார் கடமைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி<br>• சம்பவ முகாமைத்துவம்<br>• திணைக்களம்சார் கடமைகள் மேற்கொள்ளப்படுதல்<br>• சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் மற்றும் புதிய போக்குகள்,திணைக்கள நடவடிக்கைகள்<br>• சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு மற்றும் மாதிரி சிறுவர் கிராம நடவடிக்கைகள்<br>• சாதகமான பெற்றோர் நிலை |
| நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த பதிப்பாக்க மாநாடு (நுவரெலியா சனச விடுமுறை விடுதி) | 310 | 2018.11.29 - 30 | 1,240,130.00 | |

### 2.2.2 சிறுவர் இல்ல கீழ்நிலை பதவியணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தின் பெயர் | பங்குபற்றி யோர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட திகதி | செலவு ரூபா. | விடயத் தலைப்புகள் |
|---|---|---|---|---|
| சிறுவர் இல்ல கீழ்நிலை பதவியணி பயிற்சி | 27<br>23 | 19-21.02.2018<br>26 - 28.02.2018 | 128,705.00<br>117,752.00 | • சிறுவர்களுக்காக அழகியல் செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்<br>• சிறுவர் பாகாப்பு சம்பந்தமான மாற்று பராமரிப்பு முறைகள்<br>• சிறுவர்களுடன் பணியாற்றும்போது உத்தியோகத்தர்களின் மனோபாவ திறன் விருத்தி<br>• சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்ற சமூக வேலையாட்களாக பணியாற்றும் விதம் |
| மேல்மாகாண சிறுவர் இல்ல தொண்டர் முகாமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம். | 11<br>17 | 19.03.2018<br>22.03.2018 | 13,100.00<br>19,220.00 | • சிறுவர்களுக்காக அழகியல் செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்<br>• சிறுவர் பாகாப்பு சம்பந்தமான மாற்று பராமரிப்பு முறைகள்<br>• சிறுவர்களுடன் பணியாற்றும்பே ாது உத்தியோகத்தர்களின் மனோபாவ திறன் விருத்தி<br>• சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்ற சமூக வேலையாட்களாக பணியாற்றும் விதம் |

### 2.2.3 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கான வளப்பகிர்வாளர் ஒதுக்கம்

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியோர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட திகதி | நடத்தப்பட்ட இடம் | செலவு ரூபா |
|---|---|---|---|---|
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கான வளப்பகிர்வாளர் ஒதுக்கத்திற்காக ii ஆம் குழுவினைத் தெரிவு செய்தல் | சிங்கள மொழி மூலம் 37<br>தமிழ் மொழி மூலம் 15 | 2018.09.27 - 28 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 27,385.00 |

### 2.2.4 சிறுவர்கள் தொடர்பாகப் பணியாற்றுகின்ற ஒருங்கிணைந்த அலுவலர் பயிற்சி

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியோர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட திகதி | நடத்தப்பட்ட இடம் | செலவு ரூபா. | விடயத் தலைப்புகள் |
|---|---|---|---|---|---|
| சிறுவர்கள் தொடர்பாகப் பணியாற்றுகின்ற ஒருங்கிணைந்த அலுவலர் பயிற்சி:<br>❖ நுவரெலியா/புத்தளம் மாவட்டங்களிளின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்<br>❖ பொலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அலுவலர்கள்<br>❖ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்கள்<br>❖ வேளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு அலுவலர்கள் | 34 | 11-13.06. 2018 | தலாஹேன கல்வி நிலையம் | 36,933.00 | • சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம்<br>• சமூக வேலைகள்<br>• சிறுவர்களுடன் பணியாற்றும் போது சமூக வேலையாளாக<br>• சம்பவ முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல் |



# 03

# கணக்குப் பிரிவு

திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதி ஏற்பாடுகள் வருடாந்தம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு செலவுத் தலைப்பு இலக்கம் 217 இன் கீழ் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்த ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொடுக்கும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படுகின்றன.

1. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடுகள்
   பற்றிய பொழிப்பு பின்வருமாறாகும்.

## 3.1 நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலான ஏற்பாடுகள் /செலவின பொழிப்பு | | | | |
|---|---|---|---|---|
| 01.செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல.01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | மீண்டெழும் செலவனம் | 38,411,000.00 | 35,703,473.00 | 93% |
| | மூலதன செலவினம் | 899,000.00 | 890,293.00 | 99% |
| | **மொத்தம்** | 39,310,000.00 | 36,593,766.00 | |
| 02.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கருத்திட்ட இல.02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | மீண்டெழும் செலவனம் | 232,670,000.00 | 231,266,695.00 | 99% |
| | மூலதன செலவினம் | 78,450,000.00 | 74,866,795.00 | 95% |
| | **மொத்தம்** | **311,120,000.00** | **306,133,454.00** | |

| மூலதன செலவின ஏற்பாடுகள்/செலவின பொழிப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திறன் விருத்தி | | | சிறுவர் இல்லங்களை புனரமைத்தல்/சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்தல் /சிறுவர் இல்ல பிள்ளைகளின் தொழில்சார் பயிற்சி ஆற்றல் விருத்தி | | |
| 01.செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல.01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | 250,000.00 | 247,800.00 | 99 % | --- | --- | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கருத்திட்ட இல.02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | 1,450,000.00 | 1,450,000.00 | 100 % | 75,500,000.00 | 72,046,892.00 | 95 % |
| **மொத்தம்** | **1,700,000.00** | **1,697,800.00** | | **75,500,000.00** | **72,046,892.00** | |

| மூலதன செலவின ஏற்பாடுகள்/செலவின பொழிப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மூலதன சொத்துக்களை புனரமைத்தலும், மேம்படுத்தலும் | | | மூலதன சொத்துக் கொள்வனவு | | |
| | **ஏற்பாடுகள் ரூ.** | **செலவினம் ரூ.** | % | **ஏற்பாடுகள் ரூ.** | **செலவினம் ரூ.** | % |
| 01.செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல.01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | 240,000.00 | 233,531.00 | 97% | 409,000.00 | 408,962.00 | 99% |
| 02.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கருத்திட்ட இல.02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | 300,000.00 | 218,976.00 | 73% | 1,200,000.00 | 1,150,927.00 | 96% |
| **மொத்தம்** | **540,000.00** | **452,507.00** | | **1,609,000.00** | **1,559,889.00** | |

## 3.2 கணக்காய்வு அவதானிப்பு

*நிதிக்கூற்றில் கருத்து தெரிவிக்கப்படுதல் எனும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படுதப்படுகின்ற தாக்கத்தினைத் தவிர நிதிக் கூற்றுக்களின் மூலம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றுடன் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நீதியானதுமான நிலைமையைப் பிரதிபலிப்பதாக அவதானிக்கப்பட்டது.*



# 04
# நன்னடத்தைப் பிரிவு

## 4.1 அறிமுகம்

நன்னடத்தைச் சேவை என்பதன் மூலம் கருதப்படுவது நிறுவனமயப்படுத்தல், சிறைப்படுத்தல், வேறு நிதிசார் அபராதம் அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தாது குற்றவாளி ஒருவருக்கு புனர்வாழ்வு அளிப்பதாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, உரிய நபர் வாழும் சூழலிலேயே இருப்பதற்கு இடமளித்து நன்னடத்தை அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் அவர் சமூக விரோதச் செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து புதியதொரு வாழ்க்கையைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

1944 இன் 42 ஆம் இலக்க குற்றவாளிகளை நன்னடத்தையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவுக்கு அமைய யாதாயினுமொரு தவறின் தன்மைக்கு அமையவும், குற்றவாளியின் வயது, பால் மற்றும் அவரின் அந்தஸ்து ஆகிய விடயங்களும் நீதிமன்றத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்டு எந்தவொரு நபரும் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவரின் விருப்பத்துடன், எந்தவொரு தவறு தொடர்பாகவும் நன்னடத்தை உத்தரவொன்றைப் பிறப்பிக்க முடியும்.

இவ்வாறு நன்னடத்தையின் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் குற்றவாளிக்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியல் பயன்கள் கிடைப்பதுடன், இறுதியில் இது முழுச் சமுதாயத்திற்கும் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கும். உதாரணமாக யாராயினும் ஆளொருவர் ஏதேனும் குற்றச் செயலை மேற்கொண்டதை அடுத்து, அவர் சிறை அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார் எனின், இது அவரின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாகவும், சமூக அடிப்படையிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறே நாட்டுக்கும் அவ்வாறான ஆட்களைப் பராமரிப்புச் செய்வதற்காக அதிக நிதியைச் செலவிட வேண்டி ஏற்படுகின்றது. எனினும குறித்த நபரை, அவர் வாழும் சூழலில் வைத்திருந்து மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் அவரின் அன்றாட வாழ்க்கையை நல்லமுறையில் நடாத்திச் செல்வதற்காக இடமளிப்பதன் மூலம் அவருக்கும் நாட்டுக்கும் பாதகமான நிலைமை அதன் மூலம் ஏற்பட மாட்டாது. எனவே இந்த நன்னடத்தைச் சேவையை சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளித்தல் செயற்பாடாக முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைய நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் விடயம் மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள போதிலும் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை அமுல்படுத்தும் பொறுப்பு மத்திய அரசின் கீழ் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் நன்னடத்தைச் சேவை பன்முகப்படுத்தப்பட வேண்டுமாயினும், கொள்கைகள், சட்டங்களைத் திருத்தியமைப்பது மாகாண திணைக்களங்களுக்கிடையிலான இணைப்பாக்கம், மாகாண அலுவலர்களின் ஆற்றல் விருத்திக்காக நடவடிக்கை எடுக்கப்படுதல், மாகாண சபைகளுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படுதல், மாகாண சபைகளின் கீழ் காணப்படுகின்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களை தரத்தில் மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் போன்றவை மத்திய அரசாங்கத் திணைக்களத்தின் செயற்பணியாகும். அதற்கமைய மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச்

சேவைகள் திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்து நன்னடத்தைச் சேவையை மேம்படுத்துவதற்கு கடந்த காலப்பகுதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திணைக்களத்தின் செயல்ரீதியான திட்டத்தின் கீழ் மாகாண திணைக்களங்களுக்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதும், அதன் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.2 பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்

பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள மற்றும் துஷ்பிரயோக சம்பவமொன்று அல்லது உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமை காரணமாக உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள சிறுமியருக்கு மாத்திரம் ஆலோசனை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ளதொரு நிறுவனமாகும். மத்திய அரசின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஒரே நிறுவனமாகவும் இது உள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பப்படுகின்ற 14-18 வயதுக்கு இடைப்பட்ட சிறுமியர்கள் மாகாண நன்னடத்தை ஆணையாளரின் சிபாரிசின் அடிப்படையில் இந்த நிறுவனத்தில் பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். 06 மாதகாலப் பகுதிக்கு வதிவிட பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், சிறுமியர் 20 பேருக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தெரிவுசெய்துகொள்ளப்படும்போது சமூகமயப்படுத்தக்கூடிய மற்றும் சமூக மயப்படுத்துவதற்கு அண்மித்த (care Leavers) சிறுவர்களுக்காக முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்தக் காலப்பகுதிக்குள் சிறுமியருக்குத் தேவையான தொழில்சார் பயிற்சி, முறைசார் கல்வி பெறாதவர்களுக்கு முறைசாரா கல்வி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்தப் பயிற்சிக் காலத்திற்குள் களியாட்ட சுற்றுலாக்கள், சமய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் யோகாப்பியாச நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்படும். இதன் மூலம் பிள்ளைகளின் உளவியல் சிக்கல்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

பிள்ளைகளுக்காகத் தாபிக்கப்பட்டுள்ள குழுக்களை நடாத்தி அவற்றின் தீர்மானங்களுக்கு அமைய சிறுமியரை பெற்றோர் அல்லது பாதுகாவளரிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## 4.3 சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தல்

நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிக்கப்பட்டுள்ள அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டர் சிறுவர் இல்லங்களின் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் தேவைகளை தரமானதாகப் பேணிவருவதற்கான தேவைகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்களினால் இனங்காணப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்திப் பிரேரணைகளுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வருடாந்தம் இந்தத் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற இனங்காணப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரேரணைகள் தொடர்பில் கவனம் செலுத்திய பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மதிப்பீட்டுத் தொகை பூரணமாக அல்லது மதிப்பீட்டுத் தொகையில் ஒரு பகுதி மாகாண ஆணையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை முறையாகப் பூர்த்தி செய்த பின்னர் உரிய பட்டியல்கள் மற்றும் செலவின அறிக்கைகளுடன் உரிய முன்னேற்றத்தை தலைமை அலுவலகத்திற்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய 2018 ஆம் ஆண்டில் இந்த செலவுத் தலைப்பின் கீழ் நாடு முழுவதிலும் அமைந்துள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் பரத்த சிறுவர் பயிற்சி ஆலோசனை சேவைத் தேசிய நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 7,135,730.01 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

| மாகாணம் | நிகழ்ச்சித் திட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|
| வட மத்திய | போசத் ஆண் சிறுவர் இல்லத்தின் வாயிற் கதவினை நிர்மாணித்தல் 11 கட்டம் | 484,566.75 |
| | சாலியபுர மகளிர் தடுப்பு நிலையத்தின் நீர் தாங்கியை நிர்மாணித்தல். | 181,625.85 |
| | மித்ர சிறுவர் அபிவிருத்தி நிலையம் - நீரினைத் தேக்கி வைத்துக்கொள்வதற்காக தாங்கியை அமைத்துக்கொள்ளல். | 221,413.61 |
| | சரண சிறுவர் இல்லத்தில் கழிவு நீர் வழிந்தோடுவதற்காக வடிகால் முறைமை நிர்மாணிக்கப்படுதல் | 230,022.26 |
| | மடாட்டுகம சான்றுபடுத்தப்பட்ட பாடசாலைக்காக மின்பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்தல | 37,524.00 |
| | **மொத்தம்** | **1,155,152.47** |

| | | |
|---|---|---|
| ஊவா | பிபிலை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் குளியலறை/வடிகான் முறைமை நிர்மாணிக்கப்படுதல் | 900,000.00 |
| | சுஜாதா செவன சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் துணி துவைத்தல் மற்றும் உலர வைத்தல் இடம் நிர்மாணிக்கப்படுதல். | 820,907.60 |
| | யசோதரா பாலிகா தடுப்பு நிலையத்தின் பிரதான கட்டிடம் புதுப்பிக்கப்படுதல் | 190,504.61 |
| | கெப்பெட்டிப்பொல சுரக்ஷா ஆண்கள் தடுப்பு நிலையத்தின் கூரை புதுப்பிக்கப்படுதல் | 286,709.31 |
| | அம்பேகொட சிரிசங்கபோ சிறுவர் இல்லத்தின் மலசலகூடங்கள் புதுப்பிக்கப்படுதல். | 426,386.50 |
| | **மொத்தம்** | **2,624,508.02** |
| வட மேல் | மீகஹகொட்டுவ பாலிகா இல்லத்தில் வண்ணம் பூசுதல் | 220,064.00 |
| | முதித்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு வண்ணம் பூசுதல் | 220,000.00 |
| | கேப்ரியல் சிறுவர் இல்லத்திற்கான விடுதிக் கட்டிடத்தின் உட்கூரை நிர்மாணிக்கப்படுவதற்காக | 1,185,254.30 |
| | **மொத்தம்** | **1,625,318.30** |
| கிழக்கு | 03 சிறுவர் இல்லங்களுக்கு வண்ணம் பூசுதல் (ஸ்ரீ சன்முகா, ஹஸனாத், ரேவத்த சி.அ.நி) | 817,798.00 |
| | **மொத்தம்** | **817,798.00** |
| மத்திய | கம்பளை புனித ஜோசப் சிறுவர் இல்லத்திற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதல் | 88,265.00 |
| | **மொத்தம்** | **88,265.00** |
| சப்ரகமுவ | கேகாலை புனித ஜோன் சிறுவர் இல்லத்தின் கிணறு மற்றும் பழுதடைந்துள்ள வடிகான் முறைமை திருத்தப்படுதல் | 315,000.00 |
| | **மொத்தம்** | **315,000.00** |
| தேசிய பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிலையம் | பராமரிப்பு மற்றும் திருத்தப்பணிகள் | 509,688.22 |
| | **மொத்தம்** | **509,688.22** |
| **மொத்தத் தொகை** | | **7,135,730.01** |

## 4.4 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் திறமைகளை வளர்த்தல்

பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையத்தின் சிறுவர்களுக்கு மற்றும் ஒவ்வொரு மாகாணத்திலும் சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் சுயமான ஆற்றல்களை வளர்க்கும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் இதுவாகும். சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொரு மாகாணத்தினதும் சிறுவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்த பிரேரணைகளை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டது. மேற்படி பிரேரணைகளிலிருந்து சிறுவர்களுக்கு உகந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக ரூபா 1,475,910.00 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

மேலும், சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தொழில்களில் ஈடுபடுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் பல்வேறு தொழில்சார் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாகாண ஆணையாளர்கள் சமர்ப்பித்துள்ள பிரேரணைகளுக்கு அமைய ரூபா 1,612,132.82 ஆன ஏற்பாடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| மாகாணம் | நிகழ்ச்சித்திட்டம் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| வட மத்திய | மட்டாடுகம சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையின் தொழிற் பயிற்சிப் பிரிவின் குறைபாடுகளை நிறைவேற்றிக்கொள்ளுதல் | 500,786.00 |
| | யெஹெலி ஆலோசனைப் பிரிவின் தொழிற்சார் பயிற்சிப் பொறிகளைக் கொள்வனவு செய்தல் | 434,880.00 |
| | சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 03<br>மட்டாடுகம சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையின் பிள்ளைகளின் | 360,000.00 |
| | • துருனு ஹண்ட கருத்திட்டம் | 135,500.00 |
| | • பெஹசர கருத்திட்டம் | 253,170.00 |
| | • சக்தீன் புபுதுவாலமு கருத்திட்டம் | 77,000.00 |
| | சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் மனோபாவங்கள், ஆற்றல்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (பொலனறுவை மாவட்டச் செயலகம்) | 15,300.00 |

| | | |
|---|---|---|
| | **மொத்தம்** | **1,776,636.00** |
| ஊவா | கெப்பெட்டிப்பொல சான்றுபடுத்தப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளின் மின் தொழிற்சார் பயிற்சிக்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 267,725.00 |
| | **மொத்தம்** | **267,725.00** |
| கிழக்கு | சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் ஆற்றல் விருத்தி<br>சிறுவர்கள் 02 தொழிற்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 300,000.00<br>75,000.00 |
| | **மொத்தம்** | **375,000.00** |
| சப்ரகமுவ | கோவிந்தசாமி காசீர் சிறுவனின் காற்றுப் பதனம் பாடநெறி | 34,000.00 |
| | **மொத்தம்** | **34,000.00** |
| மேல் | சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் அறிவாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் (கம்பஹ மாவட்டச் செயலகம்)<br>சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்கள் மற்றும் சிறுவர் கழக சிறுவர்கள் என்போருக்கு இடையில் அனுபவ பரிமாற்றம் (கொழும்பு மாவட்டச் செயலகம்)<br>சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்காக பாடல் இரசனை நிகழ்ச்சித்திட்டம் (கெஸ்பாவ பிரதேச செயலகம்)<br>நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 100,000.00<br>112,000.00<br>16,000.00<br>79,300.00 |
| | **மொத்தம்** | **307,300.00** |
| தென் | சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் தலைமைத்துவம், ஆளுமை ஆற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் (ஹபராதுவ பிரதேச செயலகம்) | 27,640.00 |
| | **மொத்தம்** | **27,640.00** |
| தேசிய பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிலையம் | சிறுவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்தி நிகழ்ச்சிகள் | **299,741.82** |
| **மொத்தத்** | **தொகை** | **3,088,042.82** |

## 4.5 சிறுவர் இல்லங்களைக் கண்காணிப்புச் செய்தல்

இதன் கீழ் சிறுவர் இல்லங்களுக்குத் தேவையான நிலையான சொத்துக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், இனங்காணப்பட்ட சிறுவர்களை சமூகமயப்படுத்துதல், சிறுவர் இல்லங்களின் பதவியணியை பயிற்றுவித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்வதும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணியொன்றாகும். 2018 ஆம் ஆண்டு இதற்காக ரூபா 7,306,359.35 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

| மாகாணம் | நிகழ்ச்சித்திட்டம் | வழங்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|
| வட மத்திய | சிறுவர் இல்லங்களைக் கண்கானித்தல் | 61,500.00 |
| | சிறுவர் இல்லங்களின் பதவியணிகளைப் பயிற்றுவித்தல் | 111,000.00 |
| | 02 சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல் (திருமணத்திற்காக) | 28,000.00 |
| | மடாட்டுகம சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையைச் சேர்ந்த 07 மாணவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல் | 750,565.00 |
| | **மொத்தம்** | **951,065.00** |
| வடமேல் | 09 சிறுவர் இல்லங்களுக்காக பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல் | 264,050.00 |
| | சிறுவர் இல்லங்களுக்கான பதவியணிகளைப் பயிற்றுவித்தல் | 82,800.00 |
| | மூன்று சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல | 149,125.02 |
| | **மொத்தம்** | **495,975.02** |
| கிழக்கு | சிறுவர் இல்லங்களுக்கான பதவியணிகளைப் பயிற்றுவித்தல் | 130,000.00 |
| | சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல் ( 25சிறுவர்களுக்காக) | 1,350,000.00 |
| | சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல் (09 சிறுவர்களுக்காக) | 750,000.00 |
| | நன்னடத்தை அலுவலர்களின் ஆற்றல் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 147,200.00 |
| | **மொத்தம்** | **2,377,200.00** |

| | | |
|---|---|---|
| சப்ரகமுவ | இரம்புக்கன போதிராஜ சிறுவர் கிராம சிறுவர் இல்லத்தின் நிர்மாணம் கட்டம் 1 | 1,692,049.40 |
| | கேகாலை புனித ஜோன் சிறுவர் இல்லத்திற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுதல் | 121,960.00 |
| | நன்னடத்தை அலுவலர்களுக்கான ஆற்றல் விருத்தி பயிற்சி | 200,000.00 |
| | **மொத்தம்** | **2,014,009.40** |
| மத்திய | நன்னடத்தை அலுவலர்களின் ஆற்றல் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 129,075.00 |
| | மென்கெப் சிறுவர் இல்லத்தில் 2 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்படுதல் | 392,866.68 |
| | இரண்டு சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுதல் | 74,045.00 |
| | புனித பிரான்சிஸ் சிறுவர் இல்லத்தின் மலசலகூட முறைமைக்கு மிகவும் சக்திவாய்ந்த கூரையொன்று நிர்மாணிக்கப்படுதல் | 316,056.25 |
| | **மொத்தம்** | **912,042.93** |
| வட மாகாணம் | நன்னடத்தை அலுவலர்களுக்கான ஆற்றல் விருத்தி பயிற்சி | 229,950.00 |
| | **மொத்தம்** | **229,950.00** |
| | மாகாண நன்னடத்தை ஆணையாளர் கூட்டம் | 47,340.00 |
| | **மொத்தம்** | **47,340.00** |
| சிறுவர் பராமரிப்பு நிறுவன பதவியணிக்கான பயிற்சி | | **278,777.00** |
| **முழு மொத்தம்** | | **7,306,359.35** |

## 4.6 ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பாக போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அலுவலர்களை விழிப்பூட்டல்

ஆட்கடத்தல் வியாபாரமானது (Human Trafficking) இலங்கைக்குள்ளும் அதன் வெளியிலும் பெரும்பாலாக இடம்பெறுகின்ற போதிலும் தண்டனைச் சட்டக் கோவையின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட நபர்கள், வியாபாரத்திற்குரிய சம்பவங்கள் என்பன இனங்காணப்படுவது உரிய முறையில் இடம்பெறுவதில்லையென இடைக்கிடை பதிவாகின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் “இராஜாங்கத் திணைக்களத்தினால்” 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் (Trafficking in persons Report – 2018) இலங்கையானது ஆட்கடத்தல் வியாபாரத்திற்குரிய சம்பவங்களை தண்டனைச் சட்டக் கோவையின் 360 (C) பிரிவின் பிரகாரம் உரிய முறையில் இனங்காண்பதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலைமையினையும் கருத்திற்கொண்டு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஆட்கடத்தல் வியாபாரம் பற்றிய செயற்பாட்டுத் திட்டம் (2015-2019) இன் பிரகாரம் சம்பவங்களை இனங்காணுதல் மற்றும் அவற்றை தடுத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக உத்தியோகத்தர்கள் 198 பேருக்கு 3 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.





## 4.7 நீதிமன்றங்களிலிருந்து சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கு சிறுவர்களை ஏற்றிச் செல்லுதல்

சட்டத்தின் முன்னால் தவறாளிகளாக்கப்பட்ட சிறுவர்கள், சிறுவர் சந்தேக நபர்கள் மற்றும் பல்வேறுபட்ட துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதன் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் அவர்களுக்கான நீதி நிலைநிறுத்தப்படுதல் செயன்முறையின்போது அச்சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக சில சமயங்களில் தற்காலிகமாக அவர்கள் நீதிமன்ற கட்டளைகளின் பிரகாரம் சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் (Safety House) தடுத்துவைக்கப்பட நேரிடுகின்றன. குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்களும் சிறுவர் சந்தேக நபர்களும் வயது வந்த குற்றவாளிகளுடன் ஏற்றிச்செல்லப்படுவதனால் அவர்கள் இரண்டாம் நிலை துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவது வெளிக்கொணரப்பட்டதன் காரணமாக சிறுவர்களுக்கே தனியாக ஒதுக்கப்பட்ட சிறுவர் நேய போக்குவரத்துச் சேவையொன்றின் தேவை தொடர்பாக நீண்டகாலமாக கலந்துரையாடப்பட்டது.

சிறுவர்கள் சார்பாக செயற்படுகின்ற அமைச்சுக்களுடன் நீண்டகாலமாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர் சிறுவர்களின் போக்குவரத்துக்காக தனியாக ஒதுக்கப்பட்ட போக்குவரத்து முறையொன்றின் தேவை தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முடிந்துள்ளது. அதன் பிரகாரம் அதன் முதற்கட்ட நடவடிக்கையாக 5 மாகாணங்களுக்கு 5 வேன் வண்டிகளை பெற்றுக்கொடுப்பதற்கு 2018 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஞ்சிய 4 மாகாணங்களுக்கும் எதிர்காலத்தில் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன. அதேவேளை பொருத்தமான பணியாளர் தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதன் பின்னர் சகல மாகாணங்களிலும் நீதிமன்றங்களிலிருந்து சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் வரை சிறுவர்களை ஏற்றிச் செல்லக்கூடிய முறையான சிறுவர் நேய போக்குவரத்து முறைமையொன்று (child Friendly Transportation System) உருவாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்




## 4.8 மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்ற நன்னடத்தை அலுவலர்களைப் பயிற்றுவித்தல்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களமானது பன்முகப்படுத்தப்பட்டதன் பின்னர் சிறுவர்களுக்கான கொள்கைகள் தயாரிக்கப்படுதல், மாகாண அலுவலர்களின் ஆற்றல் விருத்தி, மாகாணங்களுக்கு இடையிலான இணைப்பாக்கம் உருவாக்கப்படுதல் மற்றும் மாகாண நன்னடத்தை மற்றும் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் என்பன திணைக்களத்தினால் நன்னடத்தை விடயப் பரப்பினை முதலாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்ற கடமைகளுள் ஒரு பகுதியாகும்.

அதன்பிரகாரம் உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருதியினை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 70 உத்தியோகத்தர்களுக்காக 2018 ஆம் ஆண்டு இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வடக்கு கிழக்கு ஆகிய இரு மாகாணங்களில் இத்திணைக்களத்தின் பங்களிப்போடு நடத்தப்பட்டன




## 4.9 தத்தெடுத்தல்

1941 இன் 24 ஆம் இலக்க தத்தெடுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தத்தெடுப்பதற்கு உத்தேசிக்கின்ற சிறுவர்களின் சட்டபூர்வமான பாதுகாவளராக செயற்படுகின்ற பொறுப்பு திணைக்களத்திற்கு அளிக்கப்படுகின்றது. இந்த செயற்பணி உள்நாடு மற்றும் வெளிநாடு என்ற வகையில் இரண்டாக வகுக்கப்படுகின்றது. இவற்றில் உள்நாட்டு தத்தெடுக்கும் நடவடிக்கைகள பற்றிய கடமைகள் மாகாண ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன், வெளிநாட்டு தத்தெடுத்தல பற்றிய கடமை நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் பிறந்துள்ளதுடன், தற்போது பல்வேறு நாடுகளில் பிரசாவுரிமையை பெற்றுள்ளவர்கள், இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கான இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுள்ளவர்கள் மற்றும் தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழ்ந்து வருவோரும், சிறுவர்களை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப் படிவங்களை மத்திய அரசின் இந்தத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கின்றார்கள். மேற்படி விண்ணப்பதாரர்கள் சிறுவர்களை நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதன் காரணமாக அவர்கள் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் வெளிநாடுகளில் வாழும் ஒருசில விண்ணப்பதாரர்கள் தமது குடும்பத்தின் உறவினர்களது பிள்ளைகளை தத்தெடுக்க முன்வருகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளதுடன், அவர்களும் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டி ஏற்படுகின்றது. மேலும் வெளிநாட்டவர்களும், இலங்கைப் பிள்ளைகளை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப்படிவங்களை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கின்றனர். சர்வதேச ஹேக் பிரகடனம் மற்றும் சிறுவர்களை தத்தெடுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்படி விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்நாட்டு விண்ணப்பதாரர்கள் இல்லாத சிறுவர்கள் வெளிநாட்டு தத்தெடுப்பதற்கு வழங்கப்படுகின்றனர்.

## 4.10தத்தெடுப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை –2018

| இல | நாடு | வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தத்தெடுத்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை | வெளிநாட்டுத் தத்தெடுத்தல் | தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்ட மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **01** | ஜேர்மனி | 02 | 01 | 03 |
| **02** | கனடா | - | 01 | 01 |
| **03** | பிரான்ஸ் | 02 | 04 | 06 |
| **04** | சுவீடன் | 01 | - | 01 |
| **05** | அமெரிக்கா | - | 01 | 01 |
| | **மொத்தம்** | 05 | 07 | 12 |



# 05
# அபிவிருத்திப் பிரிவு

## 5.1 அறிமுகம்

- சிறுவர்கள் தொடர்பில் விசேட பாதுகாப்பை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பாக,
- 1924 சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனீவா பிரகடனத்திலும்,
- 1959 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்திலும்,
- 1976 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- 1976 பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- 1991 சிறுவர் உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்திலும்,
- சிறுவர்களின் நலன்புரி தொடர்பில் கவனம் செலுத்துகின்ற விசேட இணை முகவராண்மை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் யாப்புக்கள் மற்றும் குறித்த ஆவணங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும், குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் சிறுவர் உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதனால் இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த பிரகடனத்தின் ஏற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் திணைக்களம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை அமுல்படுத்தியுள்ளது.

1. வாழ்வதற்கும், அபிவிருத்திக்குமுள்ள உரிமைகளை உறுதி செய்வதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
- கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
- நெனதிறிய கல்வி உதவி வழங்குதல்
- திடீர் அனர்த்தம் / மருத்துவ உதவி / இரட்டைக் குழந்தைகளுக்கு உதவும் திட்டம்.
- செனஹஸ உதவித் திட்டம்

2. சிறுவர்களின் பங்கேற்பை உறுதி செய்வதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபித்தல்
- உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்கள்

3. சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- சிறுவர் நட்புறவு மாதிரிக்கிராமங்கள் தாபிக்கப்படுதல் மற்றும் நடைமுறைபடுத்தப்படுதல்.
- சிறுவர் உரிமைகள் பிரகடனம் பற்றிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தை நடாத்தல்
- அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

4. மாற்றுப் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

## 5.2 சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதற்காக கல்வி உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல

ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளதுடன் சிறுவர் அபிவிருத்தியில் இது மிகவும் முக்கியமான காரணியொன்றாகும். சிறுவர் பராயத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு இழக்கப்பட்டால் சிறுவர்களின் எதிர்காலம் இருள்மிக்கதாகலாம். இலங்கையில் கல்வியை இடைநடுவே கைவிடுகின்ற சிறுவர்கள் காரணமாக சிறுவர் ஊழியர்கள், சிறுவயது தாய்மார் உருவாகுதல் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர்கள் உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பெற்றோரை இழப்பது, பெற்றோரின் அறிவீனம், கவனயீனம், தாய் வெளிநாடு செல்லல், பொருளாதார கஷ்டங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் இடைநடுவே பாடசாலைக் கல்வியை கைவிட நேரிடுகின்றது.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் இலங்கைச் சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதன் மூலம் தார்மீகமான சிறுவர் பரம்பரையொன்றை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இங்கு இரண்டு அணுகுமுறைகளின் கீழ் சிறுவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அவையாவன,

- பாடசாலைக் கல்வியைப் பெறுகின்ற வயதிலுள்ள போதிலும் பொருளாதார கஷ்டங்கள் காரணமாக இடைநடுவே கல்வியைக் கைவிட்டுள்ள அல்லது கைவிடக்கூடிய சிறுவர்கள்.
- பல்வேறு காரணங்களினால் விட்டு விட்டுப் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள்.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்கண்டு அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமைக்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாடசாலைமயப்படுத்தலும் மீளாய்வும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.


இந்த நிகழ்ச்சித்திட்டம் பல கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டது.

- பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களை வலுவூட்டல்.
- கல்வியறிவூட்டுவதன் முக்கியத்துவம் பற்றி சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், அலுவலர்களுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு நன்மைவிளையும் வகையில் நல்லதொரு ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புதல்.

பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**2018 ஆம் ஆண்டு கல்வி உதவி வழங்கப்படுதல்**

| மாவட்டம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| மாத்தறை | 96 | 96,000.00 |
| ஹம்பாந்தோட்டை | 72 | 72,000.00 |
| காலி | 114 | 114,000.00 |
| கொழும்பு | 78 | 78,000.00 |
| களுத்துறை | 104 | 104,000.00 |
| கம்பஹ | 78 | 78,000.00 |
| கேகாலை | 66 | 66,000.00 |
| இரத்தின்புரி | 105 | 108,475.00 |
| பதுளை | 96 | 96,000.00 |
| மொனறாகலை | 66 | 66,000.00 |
| குருநாகல் | 180 | 180,000.00 |
| மாத்தளை | 60 | 60,000.00 |
| நுவரெலியா | 30 | 30,000.00 |
| புத்தளம் | 111 | 111,000.00 |
| அம்பாரை | 120 | 120,000.00 |
| பொலனறுவை | 42 | 42,000.00 |
| அநுராதபுரம் | 132 | 132,000.00 |
| கண்டி | 123 | 127,625.00 |
| திருகோணமலை | 60 | 60,000.00 |
| யாழ்ப்பாணம் | 84 | 84,000.00 |
| மட்டக்களப்பு | 84 | 84,000.00 |
| வவுனியா | 24 | 24,000.00 |
| கிளிநொச்சி | 24 | 24,000.00 |
| முல்லைத்தீவு | 18 | 18,000.00 |
| மன்னார் | 30 | 30,000.00 |
| **மொத்தம்** | **1997** | **2,005,100.00** |





## 5.3 கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டம்

தொடர்ந்தும் சிறுவர்களின் கல்வித் தேவைகளுக்கு உத்துழைப்பு வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டமாக கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்ய முடியும். இது மாதாந்தம் வழங்கப்படுகின்ற கல்விப் புலமைப் பரிசில் திட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. விசேட கல்விசார் திறமைகளைக் கொண்டுள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்ற பாடசாலை மாணவர்கள் இதன் இலக்குக் குழுக்களாவார்கள். இவர்களிலிருந்து பொருத்தமானவர்களை தெரிவு செய்து அனுப்புவதை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மேற்கொள்வார்கள். மாதாந்தம் ரூபா 500/- இனை ஒரு சிறுவனுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**2018 ஆம் ஆண்டில் கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் புலமைப்பரிசில் வழங்கல**

| | மாவட்டம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1. | மாத்தறை | 124 | 792,000.00 |
| 2. | ஹம்பாந்தோட்டை | 138 | 762,000.00 |
| 3. | காலி | 150 | 840,000.00 |
| 4. | கொழும்பு | 95 | 525,000.00 |
| 5. | களுத்துறை | | 516,000.00 |
| 6. | கம்பஹா | 111 | 615,000.00 |
| 7. | கேகாலை | 116 | 618,000.00 |
| 8. | இரத்தினபுரி | | 606,000.00 |
| 9. | பதுளை | | 885,000.00 |
| 10. | மொனறாகலை | | 555,000.00 |
| 11. | குருநாகல் | 244 | 1,344,000.00 |
| 12. | மாத்தளை | | 435,000.00 |
| 13. | நுவரெலியா | 36 | 162,000 .00 |
| 14. | புத்தளம் | 48 | 273,000.00 |
| 15. | அம்பாறை | 50 | 222,000.00 |
| 16. | பொலனறுவை | 19 | 102,000.00 |
| 17. | அநுராதபுரம் | 171 | 948,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 18. | கண்டி | 184 | 1,044,000.00 |
| 19. | திருகோணமலை | 12 | 72,000.00 |
| 20. | யாழ்ப்பாணம் | 85 | 504,000.00 |
| 21. | மட்டக்களப்பு | 36 | 189,000.00 |
| 22. | வவுனியா | 2 | 12,000.00 |
| 23. | கிளிநொச்சி | 1 | 6,000.00 |
| 24. | முல்லைத்தீவு | 1 | 6,000.00 |
| 25. | மன்னார் | 1 | 6,000.00 |
| | **மொத்தம்** | **2008** | **12,039,000.00** |




## 5.4 நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் திட்டம்

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கல்வியை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு இந்தத் திணைக்களத்தின் முகாமைத்துவ சபையினால் நெனதிறிய நிகழ்ச்சித்திட்டம் மூலம் தனியார் துறையின் நிதி உதவியுடன் மாதாந்தம் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் செவண சரண கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின் கீழ் உப கருத்திட்டமொன்றாக அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு சிறுவனுக்கு 1000 ரூபா முதல் 2000 ரூபா வரையான உதவித் தொகை வழங்கப்படுவதுடன், இத்தொகை அனுசரணையாளரின் விருப்பத்திற்கு அமைய வழங்கப்படுகின்றது.

நெனதிறிய கல்வி புலமைப்பரிசில் திட்டம்

| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2018 | நெனதிறிய கல்வி உதவி நிகழ்ச்சித்திட்டம் | 63 | 791,077.47 |


## 5.5 இரட்டைக் குழந்தைகளுக்கான உதவி

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள இரட்டைக் குழுந்தைகளின் சுகாதாரம், போசனை, ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்கும், மேற்படி சிறுவர்களை அச்சுறுத்தலான நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குமாக வழங்கப்படுகின்ற உதவித்திட்டமொன்றாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்குத் தேவையான நிதி உதவிகள் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதன் கீழ் இரண்டு குழந்தைகளுக்கு ரூபா 7,500/- உம், மூன்று குழந்தைகளுக்கு ரூபா 15,000/- உம், நான்கு குழந்தைகளுக்கு ரூபா 20,000/- உம், ஐந்து குழந்தைகளுக்கு ரூபா 25,000/- உம் செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய ஒரு வருடத்திற்கு 500 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

| | மாவட்டம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| **1.** | மாத்தறை | 21 | 157,500.00 |
| **2.** | ஹம்பாந்தோட்டை | 8 | 60,000.00 |
| **3.** | காலி | 6 | 52,500.00 |
| **4.** | கொழும்பு | 7 | 60,000.00 |
| **5.** | களுத்துறை | 3 | 22,500.00 |
| **6.** | கம்பஹ | 6 | 56,000.00 |
| **7.** | கேகாலை | 15 | 127,500.00 |
| **8.** | இரத்தின்புரி | 26 | 195,000.00 |
| **9.** | பதுளை | 11 | 97,500.00 |
| **10.** | மொனறாகலை | 16 | 120,000.00 |
| **11.** | குருநாகல் | 27 | 210,000.00 |
| **12.** | மாத்தளை | 22 | 187,500.00 |
| **13.** | நுவரெலியா | 19 | 157,500.00 |
| **14.** | புத்தளம் | 5 | 37,500.00 |
| **15.** | அம்பாரை | 14 | 105,000.00 |
| **16.** | பொலனறுவை | 0 | - |
| **17.** | அநுராதபுரம் | 9 | 67,500.00 |
| **18.** | கண்டி | 15 | 112,500.00 |
| **19.** | திருகோணமலை | 5 | 37,500.00 |
| **20.** | யாழ்ப்பாணம் | 19 | 142,500.00 |
| **21.** | மட்டக்களப்பு | 20 | 150,000.00 |
| **22.** | வவுனியா | 7 | 52,500.00 |
| **23.** | கிளிநொச்சி | 2 | 15,000.00 |
| **24.** | முல்லைத்தீவு | 1 | 15,000.00 |
| **25.** | மன்னார் | 2 | 15,000.00 |
| | **மொத்தம்** | **286** | **2,253,500.00** |




## 5.6 மருத்துவ உதவி


குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் சுகாதார, போசனைச் சிக்கல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த உதவித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வலது குறைந்த சிறுவர்களுக்கும் இதன் மூலம் உதவி வழங்கப்படுகின்றது. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

இதன் கீழ் மருத்துவ சிகிச்சை, சத்திர சிகிச்சை, போசனை நடவடிக்கைகள், உடல் ரீதியான பலவீனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உபகரணங்களுக்கும் உதவி வழங்கப்படுகின்றது. சிகிச்சை, போசனை நடவடிக்கைகளுக்காக ரூபா 5,000/- ஆன தொகையும், சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 10,000/- ஆன தொகையும், உபகரணங்களுக்காக அவற்றின் விலைகளுக்கு அமைய பல்வேறு தொகைகளும் செலுத்தப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவுத் தொகைகள் அக்குழந்தைகளின் குடும்பங்களது பல்வேறு நிலைமைகள், அவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரிங்களின் அடிப்படையில் மாற்றமடைய முடியும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய வருடாந்தம் சுமார் 500 குடும்பங்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

**2018 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் மருத்துவ உதவி செலுத்தப்பட்ட முறை**

| தொடர் இல. | மாவட்டம் | தொகை ரூபா. | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மாத்தறை | 240,000.00 | 42 |
| 2 | ஹம்பாந்தோட்டை | 55,000.00 | 9 |
| 3 | காலி | 175,000.00 | 34 |
| 4 | கொழும்பு | 25,000.00 | 4 |
| 5 | களுத்துறை | 20,000.00 | 3 |
| 6 | கம்பஹ | 140,000.00 | 27 |
| 7 | கேகாலை | 20,000.00 | 4 |
| 8 | இரத்தின்புரி | 120,000.00 | 21 |
| 9 | பதுளை | 65,000.00 | 13 |
| 10 | மொனறாகலை | 155,000.00 | 30 |
| 11 | குருநாகல் | 275,000.00 | 49 |
| 12 | மாத்தளை | 40,000.00 | 8 |
| 13 | நுவரெலியா | 75,000.00 | 14 |
| 14 | புத்தளம் | 35,000.00 | 7 |
| 15 | அம்பாரை | 225,000.00 | 43 |
| 16 | பொலனறுவை | 5,000.00 | 1 |
| 17 | அநுராதபுரம் | 75,000 .00 | 13 |
| 18 | கண்டி | 210,000.00 | 38 |
| 19 | திருகோணமலை | 115,000.00 | 22 |
| 20 | யாழ்ப்பாணம் | 250,000.00 | 46 |
| 21 | மட்டக்களப்பு | 150,000.00 | 30 |
| 22 | வவுனியா | 10,000.00 | 2 |
| 23 | கிளிநொச்சி | 25,000.00 | 5 |
| 24 | முல்லைத்தீவு | 30,000 .00 | 6 |
| 25 | மன்னார் | 65,000.00 | 12 |
| | **மொத்தம்** | **2,600,000.00** | 483 |



## 5.7 திடீர் அனர்த்த உதவி


திடீரென ஏற்படுகின்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களின் அநாதரவான சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வழங்கப்படுகின்ற உதவித் திட்டமொன்றாகும். திடீரென சூழலில் ஏற்படுகின்ற வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, வீடுகள் தீயில் எரிதல் போன்ற நிலைமைகளினால் கஷ்டங்களை எதிர்நோக்குகின்ற சிறுவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் இதன் மூலம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் குடும்பங்களில் பெற்றோர் உயிரிழத்தல், சிறுவர்களை கைவிட்டுச் செல்லல், பெற்றோர் திடீர் விபத்துக்களுக்கும், நோய்களுக்கும் ஆளாகுதல், வெளிநாடு சென்றவர்கள் திரும்பி வராமை, சிறுவர்கள் தற்காலிக பாதுகாவளர்களின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்படுதல், குறித்த பாதுகாவளர்கள் உடல், உள ரீதியில் பலவீனமானவர்களாக இருத்தல் போன்ற காரணங்களினால் அநாதரவான நிலைக்குத் தள்ளப்படுகின்ற சிறுவர்களுக்கு உதவுவதற்கும் இந்த உதவித் திட்டத்தின் கீழ் வசதி செய்யப்படும்.

ஏதேனுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள் சேதமடைந்திருப்பின் அதற்குப் பதிலாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 5000/- ஆன உதவித் தொகை வழங்கப்படும். அவ்வாறாயினும், அவ்வவ் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற இழப்புக்களின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற உதவித் தொகை மாற்றமடைய முடியும். யாதாயினுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியளிப்பது இதன் பிரதான நோக்கமாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதிஉதவி பெற்றுக் கொடுக்கப்படும்.

**2018 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் திடீர் அனத்த உதவி செலுத்தப்பட்ட முறை**

| தொடர் இல | மாவட்டம் | தொகை ரூபா | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1** | மாத்தறை | - | |
| **2** | ஹம்பாந்தோட்டை | 50000.00 | 10 |
| **3** | காலி | 35000.00 | 7 |
| **4** | கொழும்பு | - | - |
| **5** | களுத்துறை | - | - |
| **6** | கம்பஹ | 10000.00 | 2 |
| **7** | கேகாலை | 5000.00 | 1 |
| **8** | இரத்தின்புரி | 30000.00 | 6 |
| **9** | பதுளை | 35000.00 | 7 |
| **10** | மொனறாகலை | - | - |
| **11** | குருநாகல் | 127000.00 | 44 |
| **12** | மாத்தளை | - | - |
| **13** | நுவரெலியா | - | - |
| **14** | புத்தளம் | 85000.00 | 4058 |
| **15** | அம்பாரை | 40000.00 | 8 |
| **16** | பொலனறுவை | 15000.00 | 2 |
| **17** | அநுராதபுரம் | 25000.00 | 5 |
| **18** | கண்டி | 88000.00 | 17 |

| | | | |
|---|---|---|---|
| **19** | திருகோணமலை | - | - |
| **20** | யாழ்ப்பாணம் | - | - |
| **21** | மட்டக்களப்பு | - | - |
| **22** | வவுனியா | 10000.00 | 2 |
| **23** | கிளிநொச்சி | 10000.00 | 2 |
| **24** | முல்லைத்தீவு | 10000.00 | 2 |
| **25** | மன்னார் | 25000.00 | 5 |
| | **மொத்தம்** | **600000.00** | 4178 |




## 5.8 செனஹச சேமிப்புக் கணக்கு


சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோர் இரண்டு பேரையும் இழந்துள்ள 18 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். 2006 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் போது சிறுவர்கள் 689 பேர் இதில் உள்ளடக்கப்பட்டார்கள். ஒவ்வொரு மாதமும் 18 வயதைப் பூர்த்தி செய்கின்ற சிறுவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்றார்கள்.

இந்தத் திணைக்களம், மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. ஒவ்வொரு மாதமும் குறித்த சிறுவர்களுக்காக இந்தத் திணைக்களத்தினால் மக்கள் வங்கிக்கு (காசோலை மூலம்) பணம் அனுப்பப்படுகின்றது.

18 வயது பூர்த்தியடைகின்ற சிறுவர்கள் தொடர்பாக மக்கள் வங்கி மூலம் திணைக்களத்திற்கு மாதாந்தம் அறிவிக்கப்படுவதுடன், குறித்த சிறுவர்களுக்கு உரிய நிதியை அனுப்பிய பின்னர் மக்கள் வங்கி அது பற்றிய தகவல்களை திணைக்களத்திற்கு அறியத்தரும

2018 ஆம் ஆண்டு செனெஹச சேமிப்புக் கணக்குக்கான நிதி செலவிடப்படுதல்.

| தொடர் இல | மாதம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|
| **01** | ஜனவரி | 45 | 67,500.00 |
| **02** | பெப்ருவரி | 45 | 67,500.00 |
| **03** | மார்ச் | 45 | 67,500.00 |
| **04** | ஏப்ரல் | 45 | 66,000.00 |
| **05** | மே | 45 | 63,000.00 |
| **06** | ஜூன் | 45 | 61,500.00 |
| **07** | ஜூலை | 45 | 61,500.00 |
| **08** | ஆகஸ்ட் | 45 | 61,500.00 |
| **09** | செப்டெம்பர் | 45 | 61,500.00 |
| **10** | அக்டோபர் | 45 | 60,000.00 |
| **11** | நவம்பர் | 45 | 57,000.00 |
| **12** | டிசெம்பர் | 45 | 57,000.00 |
| | மொத்தம் | | 751,500.00 |




## 5.9 செவண சரண கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பொருளாதார ரீதியில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு கற்கைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவைகளுக்கு ஏற்றவாறு மாதாந்த புலமைப் பரிசில் வழங்கப்படும். இதற்கான நிதிப் பங்களிப்பு கெப்பகரு பெற்றோர் ஊடாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.


| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| **2018** | செவண சரண கெப்பகரு பெற்றோர் திட்டம் | 07 | 126,077.47 |

## 5.10 சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபிக்கும் கருத்திட்டம்

சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 12,13,14 ஆகிய யாப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்து சிறுவர்களை வலுவூட்டுவதை பிரதான நோக்காகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு கிராம அலுவலர் மட்டத்தில் சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டன. இவ்வாறு தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்கள் ஊடாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு, நெறிப்படுத்துவதற்கு மற்றும் வலுவூட்டுவதற்கு, சிறுவர்களின் கருத்தினைத் தெரிவிப்பதற்கு, சிறுவர்களின் அபிவிருத்திக்கும், திறன் விருத்திக்குமான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை ஒன்றிணைத்து பிரதேச சிறுவர் சபையும், பிரதேச சிறுவர் சபையின் அலுவலர்களை ஒன்றிணைத்து மாவட்ட சிறுவர் சபையும், மாவட்ட சிறுவர் சபைகளை ஒன்றிணைத்து தேசிய சிறுவர் சபையும் தாபிக்கப்பட்டுள்ளது.

**சிறுவர் கழகங்கள் /சிறுவர் சபைக் கட்டமைப்பு**




2018 ஆம் ஆண்டில் விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவதனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அதன் பெறுபேறாக மாவட்ட சபைகளுக்கு விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் பங்கேற்றிருப்பதனைக் காணமுடிந்தது.

இக்கருத்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் சேவ் த சில்ரன் நிறுவனத்தினால் பெற்றுத்தரப்பட்டுள்ள சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. **பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் சபைகளை வலுவூட்டுதல்**

பிரதேச/ மாவட்ட சிறுவர் சபைகளுக்குரிய சிறுவர்களை ஒன்றுகூட்டி வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக விழிப்பூட்டும் பொருட்டு பிரதேச/ மாவட்ட சிறுவர் சபைகள் மூன்று மாதங்களுக்கொருமுறை கூட்டப்படுகின்றன. எனவே பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் சபைகளின் தொழிற்பாடு முன்னேற்றமடைகின்ற வகையில் அவற்றை வசதிபடுத்துவதற்கான பொறிமுறையினை வலுவூட்டும் பொருட்டு ஒரு பிரதேச/ மாவட்ட அலுவலகம் சார்பாக 5,000/- ரூபா வழங்கப்பட்டுள்ளது.

2. **வசதிபடுத்துனர்களை பயிற்றுவித்தல்**

இலங்கையின் சிறுவர் சபைகளுக்கான கட்டமைப்பில் சிறுவர்களின் பங்கேற்புத் தொடர்பான ஆய்வின் விதப்புரைகளின் பிரகாரம் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சிறுவர் கழகங்களை வலுவூட்டுதல் மற்றும் பேணிச் செல்லுதல் என்பவற்றுக்காக சிறுவர் கழக வசதிபடுத்துனர்களை பயிற்றுவிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதோடு இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட வசதிபடுத்துனர்களை சிறுவர் கழக வேலைத்திட்டத்தில் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு இதன் கீழ் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் (2 உத்தியோகத்தர்களைக் கொண்ட பிரதேச செயலகமொன்றுக்காக 10,000 ரூபா) 5.000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**3. தேசிய சிறுவர் சபை மற்றும் தேர்தல்**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் இரண்டு வருடங்களுக்கொருமுறை நடத்தப்படுகின்ற சிறுவர்களுக்கான பங்கேற்பு உரிமையை உறுதிப்படுத்துவதற்கான உச்சமட்ட நிறுவனக் கட்டமைப்பாகிய தேசிய சிறுவர் சபை மற்றும் தேர்தல் 2018 ஆம் ஆண்டில் எம்பிலிப்பிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட சிறுவர் சபைகளின் பிள்ளைகள் மற்றும் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/ உதவியாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/ உதவியாளர்கள் மற்றும் தலைமையகத்தினைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். அதேவேளை முதற்தடவையாக விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்கள் மற்றும் தோட்டப்புறங்களை அண்டிய சிறுவர்கள் தேசிய சிறுவர் சபைக்காக இம்முறை பங்கேற்புச்செய்தனர்.

நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கிய அம்சங்கள் பின்வருமாறு அமைகின்றன,

1. உடல் நலன் நிகழ்ச்சித்திட்டம்
2. சிறுவர் திரைப்படமொன்றைக் காட்சிப்படுத்துதல்
3. முன்னாள் சிறுவர் கழக அங்கத்தவர்களைக் கௌரவித்தல்
4. மனோபாவ அபிவிருத்தி பற்றிய உளவியல்சார் விரிவுரை
5. Talent Show
6. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்பூட்டல் விரிவுரை
7. தேர்தல் - சிறுவர்களின் வாக்குகளின் மூலம் சகல பதவிகளுக்குமான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்
8. கேளிக்கை நிகழ்ச்சி
9. புதிய தேசிய சிறுவர் சபையின் முதலாவது அமர்வு
10. சான்றிதழ் வழங்கப்படுதல்





**4. சுவர் ஓவியங்களின் ஆக்கம்**

சிறுவர்களைப் பாதுகாத்தல் எனும் தொனிப்பொருள் மற்றும் காட்சிகள் உள்ளடங்கிய சுவர் ஓவியங்கள்(Wall Painting) நகர்ப்புற பிரதேசங்களில் காட்சிபடுத்தும் நடவடிக்கையானது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சனாதிபதி தேசிய வேலைத்திட்டத்தின் 1:11 பிரிவின் மூலம் எமது திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலை இதன் பொருட்டு பயன்படுத்தப்பட்டதோடு ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை மறுதலித்தல் எடுத்துக்காட்டப்படுகின்ற வகையில் சுவர் ஓவியங்கள் பாடசாலை மதில்களில் வரைதல் இதன்போது இடம்பெறுகின்றன. இதன் பொருட்டு கல்வி அமைச்சிலிருந்தும் மாகாண கல்வி அமைச்சிலிருந்தும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு ஒரு பிரதேச செயலகத்திற்கு 10,000/ -ரூபா நீதி வழங்கப்பட்டது.





## 5. சிறுவர்களுக்கான உயிர் பாதுகாப்பு முதலுதவி முறைகளை அறிமுகம் செய்தல்

சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையினைப் பாதுகாத்தல், அபிவிருத்திக்கான உரிமை மற்றும் பங்கேற்பதற்கான உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன் பிரகாரம் உயிர்ப் பாதுகாப்பு முதலுதவி நிகழ்ச்சித் திட்டமானது சிறுவர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சிறுவர்களை வலுவூட்டும் பொருட்டு அமைந்துள்ள ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். சிறுவர்களுக்குள் ஒத்துணர்வினை உருவாக்குதல், தியாகத் தன்மையை விருத்தி செய்தல், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் புத்தி சாதுரியத்துடன் செயற்படுவதற்கான ஆற்றலினை மேம்படுத்துதல் மற்றும் திடீர் அனர்த்தங்களின்போது ஒரு குழுவாக செயற்படுவதற்கு பழக்கப்படுத்துதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுப்பதற்கான நோக்கத்துடன் இது நடைமுறைபடுத்தப்பட்டது. இதன்போது சிறுவர்களுக்கு திடீர் அனர்த்தம் ஒன்றின்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பாகவும் உடல் ரீதியாக ஏற்படக்கூடிய சேதமொன்றின்போது வழங்கப்படவேண்டிய முதலுதவி தொடர்பாகவும் சுய ஒழுக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் பிறிதொருவருக்கு ஏற்படக்கூடிய சேதத்தினைக் குறைத்துக் கொள்ளக்கூடிய விதம் தொடர்பாகவும் சுய பாதுகாப்பினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதற்காக ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு 6000 ரூபா நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது






**2018 சிறுவர் சபைகள் மற்றும் சிறுவர் கழகங்கள் சார்பாக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள**

| # | மாவட்டம் | சிறுவர் சபை/கழக கூட்டங்களை வசதிபடுத்துதல் | வசதிபடுத்துனர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் | சுவர் ஓவியங்கள் உருவாக்கம் | முதலுதவி நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 70,000.00 | 80,000.00 | 130,000.00 | 78,000.00 |
| 2 | கம்பஹ | 70,000.00 | 105,000.00 | 130,000.00 | 78,000.00 |
| 3 | களுத்துறை | 75,000.00 | 85,000.00 | 140,000.00 | 84,000.00 |
| 4 | மாத்தளை | 55,000.00 | 60,000.00 | 90,000.00 | 60,000.00 |
| 5 | நுவரெலியா | 30,000.00 | 40,000.00 | 50,000.00 | 30,000.00 |
| 6 | கண்டி | 105,000.00 | 140,000.00 | 200,000.00 | 120,000.00 |
| 7 | மாத்தறை | 85,000.00 | 85,000.00 | 160,000.00 | 96,000.00 |
| 8 | காலி | 100,000.00 | 105,000.00 | 190,000.00 | 114,000.00 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 65,000.00 | 75,000.00 | 120,000.00 | 72,000.00 |
| 10 | குருநாகல் | 155,000.00 | 215,000.00 | 300,000.00 | 180,000.00 |
| 11 | புத்தளம் | 85,000.00 | 80,000.00 | 160,000.00 | 96,000.00 |
| 12 | அநுராதபுரம் | 115,000.00 | 115,000.00 | 220,000.00 | 132,000.00 |
| 13 | பொலனறுவை | 40,000.00 | 45,000.00 | 70,000.00 | 42,000.00 |
| 14 | பதுளை | 80,000.00 | 80,000.00 | 150,000.00 | 90,000.00 |
| 15 | மொனறாகலை | 60,000.00 | 55,000.00 | 110,000.00 | 66,000.00 |
| 16 | இரத்தினபுரி | 90,000.00 | 85,000.00 | 170,000.00 | 102,000.00 |
| 17 | கேகாலை | 60,000.00 | 70,000.00 | 110,000.00 | 66,000.00 |
| 18 | யாழ்ப்பாணம் | 75,000.00 | 80,000.00 | 140,000.00 | 84,000.00 |
| 19 | கிளிநொச்சி | 25,000.00 | 20,000.00 | 40,000.00 | 24,000.00 |
| 20 | மன்னார் | 30,000.00 | 25,000.00 | 50,000.00 | 30,000.00 |
| 21 | வவுனியா | 25,000.00 | 20,000.00 | 40,000.00 | 24,000.00 |
| 22 | முல்லைத்தீவு | 20,000.00 | 15,000.00 | 50,000.00 | 30,000.00 |
| 23 | மட்டக்களப்பு | 75,000.00 | 70,000.00 | 140,000.00 | 84,000.00 |
| 24 | அம்பாறை | 105,000.00 | 100,000.00 | 200,000.00 | 120,000.00 |
| 25 | திருகோணமலை | 55,000.00 | 50,000.00 | 100,000.00 | 60,000.00 |
| | **மொத்தம்** | **1,750,000.00** | **1,900,000.00** | **3,260,000.00** | **1,962,000.00** |

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை**

| | மாவட்டம் | 2018 பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் கழகங்கள் | பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 45 | 262 |
| 2 | களுத்துறை | 35 | 228 |
| 3 | கம்பஹ | 41 | 346 |
| 4 | கண்டி | 73 | 518 |
| 5 | மாத்தளை | 45 | 210 |
| 6 | நுவரெலியா | 14 | 138 |
| 7 | காலி | 148 | 394 |
| 8 | மாத்தறை | 19 | 214 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 18 | 226 |
| 10 | இரத்தினபுரி | 40 | 257 |
| 11 | கேகாலை | 44 | 223 |
| 12 | அநுராதபுரம் | 57 | 312 |
| 13 | பொலனறுவை | 14 | 80 |
| 14 | புத்தளம் | 48 | 262 |
| 15 | குருநாகல் | 53 | 640 |
| 16 | பதுளை | 40 | 185 |
| 17 | மொனறாகலை | 3 | 167 |
| 18 | திருகோணமலை | | 78 |
| 19 | அம்பாரை | 15 | 146 |
| 20 | மட்டக்களப்பு | 12 | 97 |
| 21 | யாழ்ப்பாணம் | 42 | 137 |
| 22 | கிளிநொச்சி | 22 | 80 |
| 23 | மன்னார் | 5 | 35 |
| 24 | முல்லைத்தீவு | | 30 |
| 25 | வவுனியா | 29 | 67 |
| | **மொத்தம்** | **862** | **5332** |

**2015–2018 வரை சிறுவர் கழங்கங்களின் பதிவு**



## 5.11 தெருக் குழந்தைகளுக்கான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் துஷ்பிரயோகத்தினைக் குறைத்து பாதுகாப்பான சிறுவர் சந்ததியினரை உருவாக்குவதற்காக செயற்படும்போது தெருக் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் என்பவற்றுக்காக நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பது மிகவும் முக்கியமாகும். இதன் கீழ் கொழும்பு, கம்பஹ, கண்டி மற்றும் கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் பெரும்பாலாக வாழ்கின்ற தெருக் குழந்தைகள் தொடர்பான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கான ஒதுக்கீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதனூடாக தெருக் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், பேணுதல், சிறுவர்களின் ஆக்கத்திறன், இலைமறைகாய்களாக காணப்படுகின்ற திறன்கள், தீர்மானம் மேற்கொள்வதற்கான ஆற்றல் என்பவற்றை முன்னேற்றி ஆளுமை மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக உதவி செய்ய முடிந்துள்ளது.

**தெருக் குழந்தைகளுக்கான நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளும் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளும்**

| மாவட்டம் | தெருக் குழந்தைகளுக்காக நலனோம்பல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் | தெருக் குழந்தைகளின் குடும்பங்களைக் கட்டியெழுப்புதல் | தெருக் குழந்தைகளுக்காக பகல்நேர பாதுகாப்பு நிலையங்களைப் பேணுதல் |
|---|---|---|---|
| கண்டி | 25,000.00 | 125,000.00 | 600,000.00 |
| கொழும்பு | 266,280.00 | 125,000.00 | 600,000.00 |
| மொனறாகலை | - | 320,000.00 | - |
| மொத்தம் | **291,280.00** | **570,000.00** | **1,200,000.00** |

## 5.12 சிறுவர் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் நேய சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கான நோக்கத்துடன் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சிறுவர் நேய மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாதிரிக் கிராமங்கள் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமாக கட்டியெழுப்பப்பட்ட வேலைத்திட்டங்களை பயன்படுத்தி சமுதாயத்தினரின் செயல்முனைப்புடனான தலையீட்டுடன் இயங்கி வருகின்றன. சிறுவர் ஆலோசனைக் குழு அலுவலர்களின் (Child Advisory Team) தலையீடும் இப்பொறிமுறையினை வலுவூட்டுவதற்கு உதவியாக அமைந்துள்ளது.

திணைக்களத்தினால் சிறுவர்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை இக்கிராமங்களில் நேரடியாக நடைமுறைப்படுத்த முடியும். சிறுவர்களின் பங்கேற்பு உரிமையை உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்கபூர்வமாக இக்கிராமங்களில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமை உள்ளது.

சிறுவர் மாதிரிக் கிராமங்களை இனங்காண்பதானது கிராமத்தில் உள்ள சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற ஆபத்து நிலைமைகளின் பிரகாரம் இடம்பெறுகின்றதென்பதோடு சமுதாயத்தினரின் உதவி மற்றும் தலையீடு மூலம் தற்போது கிராமத்தில் காணப்படுகின்ற செயன்முறையினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அச் செயன்முறையானது ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படுகின்ற செயன்முறைக்குப் பொருத்தமான வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முறையின் மூலம் சமுதாயத்தினரின் தீர்மானங்கள் மற்றும் தேவைகள் மீது அடிப்படையாக அமைந்து தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

இவ்வருடம் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆக்கபூர்வமான வகையில் மாதிரிக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிக்காக சகல சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு/ உதவி உத்தியோகத்தருக்கும் தலா 3000/- ரூபா நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது.

அவ்வகையில் 331 பிரதேச பிரிவுகளுக்கு நிதி அனுப்பப்பட்டதோடு "சிறுவர்களை வளர்ப்பதற்கான சிறந்த முறைகள்" தொடர்பாக 331 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற பெற்றோர்கள் ஏற்கனவே விழிப்பூட்டப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட 10 மாதிரிக் கிராமங்களுக்கு ஒருங்கிணைந்த மாதிரிக் கிராமம் கருத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட ஆபத்தான நிலைமைகளை குறைப்பதற்கு, சிறுவர்களை கட்டியெழுப்புவதற்கு, அச்சிறுவர்களின் குடும்பங்களை வலுவூட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் மிகவும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 5.13 சிறுவர் உரிமைகள் சாசனத்தினை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் நடைமுறைப்படுத்தப்படும் பணியின் பொருட்டு சமுதாய அடிப்படையிலான சமூகக் கட்டமைப்புகள் தாபிக்கப்படுதல் மற்றும் பலப்படுத்தப்படுதல் இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஒரு பணியாகும். அதன் பிரகாரம் சிறுவர் உரிமைகள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுதல், சிறுவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சாதகமான தலையீடுகளை மேற்கொள்ளுதல், அப்பணிகள் நடவடிக்கைச் செயன்முறையில் உள்ளடக்கப்படுதல் சார்பாக சிறுவர் உரிமைகள் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைக் குழு செயன்முறை பேணப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையிலான சகல நிர்வாக மட்டங்களிலும் உத்தியோகத்தர்களும் சமுதாயமும் இணைந்து பேணிச் செல்கின்ற ஒரு குழுக் கட்டமைப்பாக தொழிற்படுகின்றது. அதன் பிரகாரம் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் சகல கிராமங்களுக்குமாக கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அதற்காக சட்டரீதியான விடயங்களுடன் முறைசார் தன்மையை ஏற்படுத்துவதன் பொருட்டு முறையான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளையில் பிரதேச ரீதியான வழிகாட்டல்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை பிரதேச செயலாளரின் பங்கேற்புடன் பிரதேச நடவடிக்கைக் குழு, மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் தேசிய நடவடிக்கைக் குழு என்ற வகையில் இந்த குழுக்களுக்கான செயன்முறை வியாபித்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக மிகவும் பலம் வாய்ந்த அடிப்படையொன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு அதற்கு ஒருங்கமைவாக 01/2018 இலக்கமுடைய மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய அமைச்சின் மூலம் சகல அரச தரப்பினர்களுக்கும் சுற்றறிக்கையொன்று வினியோகிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அந்தந்த குழுக்களின் கட்டமைப்பு, செயற்பொறுப்பு என்பன தனித்துவமான முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இச் செயன்முறையின் கீழ் நாடு பூராகவும் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் சுமார் 7000 தாபிக்கப்பட்டுள்ளதோடு 331 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பிரதேச சிறுவர் அபிவருத்திக் குழுக்கள் இயங்கி வருகின்றன. மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு மாவட்ட செயலாளரின் தலைமையில் இடம்பெறுவதோடு 25 மாவட்டங்கள் உள்வாங்கப்படுகின்ற வகையில் குழுவின் கட்டமைப்பு உருவாகியுள்ளது. 01/2018 சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழு தொழிற்படுவதோடு தற்போது தென் மாகாணம், மத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் குழுக்கள் தாக்கப்பட்டு அவை தொழிற்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் மத்திய மாகாண குழுக்கள் இரண்டும் வட மத்திய மாகாண குழுக்கள் இரண்டும் என்ற வகையில் மொத்தம் நான்கு மாகான குழுக்களுக்காக 44,000 ரூபா அனுப்பப்பட்டுள்ளது. தேசிய குழுவானது மிகவும் செயல் முனைப்புடன் காணப்படுவதோடு 2018 ஆம் ஆண்டில் தேசிய குழுக் கூட்டமொன்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தரவு முறைமை தொடர்பாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடத்தப்பட்டுள்ளன. அதற்காக 11,180 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

### தேசிய தொழிற்பாட்டுக் குழு

சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 மே 27 ஆம் திகதி விநியோகிகப்பட்ட அப/17/1952/740/010 இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான தேசிய தொழிற்பாட்டுக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

அதன் தலைமைத்துவமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வகிப்பதோடு இணைப்பாக்கமானது நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதிமேதகு சனாதிபதியினால்

நியமிக்கப்பட்ட ஆறு அலுவலர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். அதேவேளை,சிறுவர் அலுவல்கள் தொடர்பாக நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படுகின்ற நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது பெயரிடப்பட்ட அலுவலர்கள் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

2018 ஆம் ஆண்டுக்காக தேசிய தொழிற்பாட்டுக் குழு ஒரு கூட்டத் தொடரினை நடாத்தியதோடு அதற்காக ஒரு தொகை செலவிடப்பட்டது.

## 5.14 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சமூகத்தில் முறைகேடான சிக்கல்களை எதிர்நோக்குகின்ற சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு செயற்பாடுகளின் மூலம் சிறுவர்களை வலுவூட்டல் மற்றும் சமூகத்தின் பல்வேறு பகுதியினர் அறிவுறுத்தப்படுகின்றனர். பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் சிறுவர்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்களை இனங்கண்டு, தமது சிக்கல்களை குறைப்பதற்காக சிறுவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் கிராமிய மக்களுக்குத் தேவையான அறிவு வழங்கப்படுகின்றது.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அலுவலர்களினால் அவர்களின் தொகுதிகள் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்கள் பற்றிய பல்வேறு கருத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டு எம்மிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேற்படி கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மாவட்ட கருத்திட்டங்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய 2018 ஆம் ஆண்டுக்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2,345,000 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## 5.15 உலக சிறுவர் தினம்

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்தத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. அதேவேளை, 2018 ஆம் ஆண்டு உலக சிறுவர் தின தேசிய விழா “தைரியமாக முன்னோக்கிச் செல்வதற்காக - எமது சிறுவர்களைப் பலப்படுத்துவோம்” எனும் தொனிப்பொருளின் கீழ் கொழும்பு அலரி மாளிகையில் சிறுவர்களின் கலாசார அம்சங்கள், விசேட விரிவுரைகள் என்பனவற்றை இணைத்துக் கொண்டு வெகு விமரிசையாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய அமைச்சுடன் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டது. அன்றைய தினம் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்கள் சுமார் 2000 பேர் பங்கேற்றனர்.

உலக சிறுவர் தினத்தினை முதலாகக் கொண்டு சுமார் 353 பிரதேச செயலகங்களையும் மாவட்டச் செயலகங்களையும் சேர்ந்த சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/ சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை அக்டோபர் மாதம்

பூராகவும் நடத்தினர். அதற்காக மேற்படி பிரதேச செயலகங்களுக்கும் மாவட்டச் செயலகங்களுக்கும் 5000/- ரூபா வீதம் 1,765,000 ரூபா தொகை செலுத்தப்பட்டது.





## 5.16 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள்

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்திற்கு பெயர் குறிப்பிட்டும், அநாமதேய அடிப்படையிலும், எழுத்து மூலமும், தொலைபேசி மூலமும் 113 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், மேற்படி சகல முறைப்பாடுகளையும் அடுத்த கட்ட விசாரணை நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய பிரதேச செயலாளர்கள் ஊடாக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கும், பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கும், உரிய பொலிஸ் நிலையங்களுக்கும், தொழில் திணைக்களம், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் போன்றவற்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய முறைப்பாடுகள் தொடர்பில் அவசியமான ஆலோசனைகள் தொலைபேசி ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 5.17 பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல்

அச்சுறுல்லதான நிலைமையில் காணப்படுகின்ற சிறுவர்களுக்கு நீண்டகால பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத்திட்டமாக பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் உபாயமுறையிலான முறையியல் ஒன்றாக இதன் தேவை எழுவது 2011 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் அச்சுறுத்தலான சிறுவர்களை இனங்காண்பதற்காக நடாத்தப்பட்ட ஆய்வில் பெருமளவு எண்ணிக்கையான சிறுவர்கள் இனங்காணப்பட்டதனாலாகும்.

இவ்வாறு இனங்காணப்பட்ட சிறுவர்களின் அச்சுறுத்தல் நிலைமைகள் பலதரப்பட்டவையாகும். அவர்களின் அச்சுறுத்தலான நிலைமைகளுக்கு அமைய மேற்படி அச்சுறுத்தல் நிலைமைகளைத் தவிர்த்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. இவை குறுங்கால அடிப்படையிலும், பல வருடங்கள் நீடிக்கின்ற நீண்ட கால அடிப்படையிலும் அமுல்படுத்தப்படுவதுடன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு


அலுவலர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இந்தப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வது முதல் அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் உட்பட சகல நடவடிக்களின் போதும் பிற வெளிக்கள அலுவலர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் போது தனி நபரிலும் பார்க்க கூட்டான அணுகுமுறை ஊடாக செயற்படுவதன் முக்கியத்துவமும் இதனூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலம் பிள்ளைக்குப் பாதுகாப்பும், அபிவிருத்தியும் கிடைப்பதுடன், குடும்பங்களும் கட்டியெழுப்பப்படுகின்றன. குறிப்பாக சிறுவர்களின் போசணை மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான குடும்பங்களின் வருமான வழிமுறைகளை மேம்படுத்தல், துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கல்வி நிலைமைகளை மேம்படுத்தத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றலும் கிடைத்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறாகும்.

| தொடர் இல. | மாவட்டம் | நிதி செலவினம்(ரூபா) | தயாரிக்கப்படுகின்ற பாதுகாப்புத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **01** | கொழும்பு | 1,128,128.00 | 118 |
| **02** | களுத்துறை | 1,864,270.00 | 124 |
| **03** | கம்பஹ | 911,758.00 | 106 |
| **04** | காலி | 1,489,151.00 | 131 |
| **05** | மாத்தறை | 1,236,455.00 | 112 |
| **06** | ஹம்பாந்தோட்டை | 2,672,827.00 | 131 |
| **07** | பதுளை | 1,797,877.00 | 194 |
| **08** | மொனறாகலை | 613,865.00 | 118 |
| **09** | கேகாலை | 1,235,473.00 | 175 |
| **10** | இரத்தினபுரி | 2,663,203.99 | 216 |
| **11** | கண்டி | 1,612,063.50 | 318 |
| **12** | நுவரெலியா | 383,498.00 | 59 |
| **13** | மாத்தளை | 1,397,206.00 | 136 |
| **14** | குருநாகல் | 3,008,224.00 | 486 |
| **15** | புத்தளம் | 1,489,49000 | 130 |
| **16** | அநுராதபுரம் | 1,643,274.00 | 140 |
| **17** | பொலனறுவை | 462,384.00 | 55 |
| **18** | அம்பாரை | 1,300,525.00 | 62 |
| **19** | திருகோணமலை | 1,391,149.00 | 82 |
| **20** | மட்டக்களப்பு | 2,747,226.00 | 100 |
| **21** | யாழ்ப்பாணம் | 697,016.12 | 165 |
| **22** | மன்னார் | 808,800.00 | 64 |
| **23** | வவுனியா | 1,105,600.00 | 63 |
| **24** | முல்லைத்தீவு | 195,700.00 | 44 |
| **25** | கிளிநொச்சி | 1,211,800 | 64 |
| | **மொத்தம்** | **35,066,963.61** | **2735** |




## 5.18 சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகள் (Child Led Research)

சிறுவர்கள் விழிப்புடன்கூடியவர்களாவார்கள். தர்க்க ரீதியானதும் ஒத்துணரக்கூடியதுமான பகுப்பாய்வுகளை அவர்களுக்குள் காணமுடியும். சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதையும் அவை மீறப்படுகின்றபோது சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்ற விதத்தினையும் உண்மையிலேயே சிறுவர்களே அனுபவிக்கின்றனர். எனவே சிறுவர்களுக்குள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றை அவர்களாலேயே கண்டறியப்பட முடியும். சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமானது அதற்கான வாய்ப்பினைப் பெற்றுத்தருகின்றது. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட சிறுவர் சபை நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள் தமது மாவட்டத்தில் சிறுவர்கள் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற நிலைமைகள் தொடர்பாகப் பயின்று அவற்றுக்கான தீர்வுகள் அவர்களாலேயே முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் தேவையான தலையீட்டினை வலுவூட்டுவதாகும். சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளை இனங்காண்பதும் அதற்காக சிறுவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் அறிவினை மேம்படுத்துவதும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சிறுவர்கள் பெற்றுக் கொள்ளும் சாதகமான அனுபவங்களுக்கு மத்தியில் காணப்படுகின்றன. ஆராய்ச்சி என்பது சிறுவர்களுக்கு மத்தியில் பெரிதும் பிரபல்யம் அடையாவிட்டாலும்கூட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பிள்ளைகளின் ஊக்கம் மற்றும் உற்சாகம், தமது நண்பர்களின் நலனோம்பலின் பொருட்டு தலையிட முடிவதும் அவர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கொண்டுள்ள விருப்பத்தினைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டில் இத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் 2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 12 மாவட்டங்களிலும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலும் முழுமையாக சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட 13 ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடிந்தது. அதேவேளை 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்ட

சிக்கல்களுக்காக 5 முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு இந்நிகழ்ச்சித திட்டத்தின் கீழ் 13,59747.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## 5.19 சிறுவர்களை மையமாகக் கொண்ட அனர்த்த ஆபத்துக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டம

இலங்கையானது அனர்த்த ஆபத்து வலய நாடாக இனங்காணப்பட்டுள்ளதோடு அண்மைக்கால வரலாற்றில் இலங்கைச் சமூகமானது பல்வேறுபட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்திய சமுத்திரத்தில் மிகவும் சிறிய தீவாக அமைந்துள்ள இலங்கையின் காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களுக்கு பிரதானமாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைகள் காரணமாக அமைகின்றன. அதிக மழையின் காரணமாக ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்குகள், மண்சரிவுகள், வரட்சி, புயல் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் வருடம் பூராகவும் காணமுடிகின்றன. இந்த ஆபத்து நிலைமைகளிலிருந்து சிறுவர்களை மீட்பதற்காக அவர்களை வலுவூட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும். தற்காலத்தில் வலுவூட்டப்படுகின்ற குழந்தைகள் எதிர்காலத்தில் ஒட்டுமொத்த சமூகத்தினையும் வலுவூட்டுவதற்கு முயற்சிப்பார்கள். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் சிறுவர்களை மையமாகக் கொண்ட அனர்த்த ஆபத்துக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அறிமுகப்படுத்துவது இப்பின்னணியினை அடிப்படையாகக்கொண்டேயாகும். சிறுவர்கள் அனர்த்த ஆபத்துகளைக் குறைப்பதற்கான முறைகளை இனங்கண்டு செயற்படுவதும் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் சிறுவர்களை அதன் பொருட்டு வலுவூட்டுவதும் அனர்த்த ஆபத்து முகாமைத்துவத்தின்போது சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இடம்பெறுகின்றன.

இதன் அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மத்தியில் பிரதேச மட்டத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதும் மாவட்ட மட்டத்தில் சிறுவர் கழக சிறுவர் சபைகள் ஊடாக அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்குத் தேவையான முன்தயார் நிலைகளை வலுவூட்டுவதற்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் சிறுவர் கழக பிரதிநிதி சிறுவர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் 417 பேருக்காக 2018 ஆம் ஆண்டில் 10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக 963,963.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## 5.20 குழந்தைகள் மீதான வன்முறையைக் குறைப்பதற்கான தெற்காசிய வலய அமைப்பு

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான தெற்காசிய வலய அமைப்பானது 2005 ஆம் ஆண்டு சார்க் வலய நாடுகள் ஒருங்கிணைந்த இணக்கப்பாட்டுடன் அமைத்துக்கொண்டுள்ளதோடு இலங்கை அரசாங்கத்தின் முகவராலயமாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சும், அதன் முழுமையான வழிகாட்டலின் கீழ் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான இணைப்பாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நிறுவனமாக நன்னடத்தை

மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களமும் தொழிற்படுகின்றன. வலய ரீதியில் இனங்காணப்பட்ட குழந்தைத் திருமணங்கள், சிறுவர் உழைப்பு, உடல் ரீதியான தண்டனை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் ஆட்கடத்தல் போன்ற அடிப்படை சிக்கல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்படி SAIEVAC அமைப்பு தொழிற்பட்டு வருகின்றது.

சிறுவர் உழைப்பினை வலய ரீதியில் மறுதலித்தல், குழந்தைத் திருமணங்களை மறுதலித்தல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் மற்றும் இணையத்தளத்தில் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் போன்ற சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு வலய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான முறையியலில் காணப்படுகின்ற தொழில்நுட்பக் குழு கூட்டங்களுக்காக இலங்கையானது உபசார நாடாக முன்நிற்கின்றது. இதற்கிடையில் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடத்தப்பட்ட சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் மற்றும் இணையத்தளத்தில் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாட்டு திட்டத்தினை தயாரிப்பதற்கான மூன்றாம் வலய தொழில்நுட்ப வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட கூட்டத்தின் உபசார நாடாக இலங்கை முன் வந்ததுடன் அதன் இணைப்பாக்க நடவடிக்கைகள் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

## 5.21 மாதாந்த மற்றும் வருடாந்த முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கான இணையவழி தரவு முறைமை

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைபடுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மாதாந்த மற்றும் வருடாந்த முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கான இணையவழி தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது (Online Database). மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினால் அறிக்கையிடப்படவுள்ள மாதாந்த மற்றும் வருடாந்த முன்னேற்றமானது இதுவரை காலமும் எழுத்தின் மூலமாக திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அறிக்கையிடலை மேற்கொண்டும் வினைத்திறன்மிக்கதாக்கும் நோக்கத்துடன் இத்தரவு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தரவு முறைமையானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## 5.22 இலங்கைச் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அனைத்து வகையிலுமான துன்புறுத்தல்களைத் தடுப்பது தொடர்பான தேசிய சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல்கள்

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களமானது ஆறு தசாப்தத்திற்கும் அதிகமான காலமாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இன்றைய சிக்கலான சமூகப் பொருளாதார சூழமைவில் சிறுவர்கள் முகம் கொடுக்கின்ற நெருக்கடியான நிலைமைகளும் நாளுக்கு நாள் சிக்கல் அடைந்து வருவதை இனங்காண முடியும். சிறுவர்கள்

எதிர்நோக்குகின்ற இந்த சவால்களை தோற்கடித்து அவர்களுக்கு மிகவும் நேயமான சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டுமானால் அதற்கேயுரிய புதிய நுட்ப முறைகளை இனங்காண்பது முக்கியமாகும்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் இந்த நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டு இலங்கையின் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அனைத்து வகையிலுமான துன்புறுத்தல்களைத் தடுப்பது தொடர்பான தேசிய சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல் கோவையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அது சிறுவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் என்போரை உள்ளிட்ட துறையில் செயற்பட்டு வருகின்ற குழுக்களை பங்கேற்கச் செய்து பல செயலமர்வுகளை நடாத்தி இறுதியாக தயாரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. 2018.06.05 ஆம் திகதி அமைச்சரவை நிருப இலக்கம் 18/1093/833/003 கீழ் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அனைத்து வகையிலுமான துன்புறுத்தல்களை தடுப்பது தொடர்பான இத்தேசிய சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல் கோவையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டு சகல சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களையும்/உதவியாளர்களையும் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் மேல் மாகாண மற்றும் தென் மாகாண உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டதோடு 2019 ஏப்ரல் மாதமளவில் சகல உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சி திட்டத்திற்காக சிறுவர்களின் சமூக பாதுகாப்புக்கான கருத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 5.23 மூன்று வருட பிரதேச திட்டம்


மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சின் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பிரகாரம் பின்வரும் காரணிகளை முதலாகக் கொண்டு இலங்கையில் பெருமளவில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன,

1. கட்டாய கல்வி கிடைக்கப் பெறாமை
2. பாலியல் தொந்தரவு மற்றும் உடல் ரீதியான தண்டனை அதிகமாக காணப்படுதல்
3. 18 வயதுக்குக் குறைந்த சிறுமிகளுக்கு மத்தியில் குறைந்த வயதிலான கருத்தரிப்புகள் அதிகமாகக் காணப்படுதல்

குறைந்த வயதிலான திருமணங்கள் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதோடு சிறுவர்கள் பாடசாலைக் கல்வியினை இடைநடுவே விட்டுச் செல்லும் போக்கும் காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்வாங்கப்படுகின்ற வகையில் எதிர்வரும் மூன்று வருடங்களுக்காக (2018/2019/2020) சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சானது பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட பிரதேச திட்டத்திற்காக அமைச்சு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தினால் வருடாந்த ஒதுக்கீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அதன் பிரகாரம் பின்வரும் மாவட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| **3 வருட பிரதேச திட்டங்களுக்காக நிதி ஏற்பாடுகள் அனுப்பப்படுதல் 2018** | | |
|---|---|---|
| **மாவட்டம்** | **தொகை (ரூ)** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** |
| மொனறாகலை | 127,780.00 | 48 |
| கேகாலை | 20,000.00 | 21 |
| இரத்தினபுரி | 357,815.00 | 58 |
| பதுளை | 528,000.00 | 52 |
| புத்தளம் | 456,420.00 | 38 |
| மாத்தளை | 98,250.00 | 44 |
| முல்லைத்தீவு | 52,500.00 | 8 |
| குருநாகல் | 333,900.00 | 21 |
| ஹம்பாந்தோட்டை | 255,000.00 | 68 |
| மாத்தறை | 345,000.00 | 75 |
| களுத்துறை | 65,000.00 | 12 |
| கொழும்பு | 183,300.00 | 39 |
| திருகோணமலை | 130,000.00 | 48 |
| மட்டக்களப்பு | 40,000.00 | 33 |
| காலி | 8,000.00 | 05 |
| **மொத்தம்** | **3,000,965.00** | **570** |



## 5.24 நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்தின் மூலம் இயக்கப்படுகின்ற மாடி வீடுகளில் குடியுள்ள சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

இத்திணைக்களமானது சிறுவர்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் அவர்களின் உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி சிறுவர்நேய சமூகச் சூழலை உருவாக்குவதற்காக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. நகர அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைபடுத்துகின்ற நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்ற அடுக்கு மாடிகளை அண்டியதாக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. அடுக்கு மாடிகளை அண்டியதாக சிறுவர் கழகங்களைத் தாபித்தல்
2. சிறுவர் நூலகங்களை ஆரம்பிப்பதற்காக வசதிகளை வழங்குதல்
3. எழுத்தறிவு வகுப்புகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
4. சிறுவர் நட்புறவு நிலையங்களுக்கு வசதிகளை வழங்குதல்

5.சிறுவர்களினதும் பெற்றோர்களினதுவும் அடிப்படை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதற்காக வசதிகளை வழங்குதல்.

அதன் பிரகாரம் முதலாம் கட்டமாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் மிகிந்துசென்புர அடுக்குமாடித் தொடரில் மற்றும் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் சிறிமுத்து பூங்கா அடுக்குமாடித் தொடரில் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டங்களாக 2 நடமாடும் சேவைகளை நடாத்தி தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. அதற்காக திணைக்களமானது 251,000.00ரூபா செலவினை மேற்கொண்டது.